
கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை செப்டம்பர் 2010 அங்கம் [illegible]



# பிறப்பற்றவரின் பிறப்பு



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




நவீன சமுதாயத்தின் பல்வேறு பிரச்சனைகளால் சிக்கித் தவிக்கும் நம் போன்ற மனிதர்களைக் காப்பாற்றுவது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் உன்னதக் குறிக்கோளாகும். ஆன்மீகத் தன்னுணர்வை மறந்து, முன்னேற்றம் என்ற பெயரில் புலனின்பமே பிரதானம் என்று திகழும் நவீன நாகரிகம், நம்மை மிருகங்களாக்கி வருகிறது. நாம் நமது முன்னேற்றத்தினை நிறுத்திவிட வேண்டும் என்பதல்ல; மாறாக, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை மையமாகக் கொண்டு, ஆன்மீக எழுச்சி பெறுவதற்கான உன்னத வழிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவனின் திருநாமங்களான இந்த தெய்வீக ஒலியதிர்வுகள், அமைதியும் ஆனந்தமும் கொண்ட திவ்யமான சூழ்நிலையை உடனடியாக ஏற்படுத்தவல்லவை. ஜடவுலக முன்னேற்றம் என்னும் வரம்புகளைக் கடந்து கிருஷ்ண பக்தியின் ஆனந்தமயமான தெய்வீக சூழ்நிலையினுள் நுழைவதற்கு நம் மனித சமுதாயத்திற்கு உதவுவதே இந்த ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் குறிக்கோளாகும்.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 6 செப்டம்பர் 2010

4 கடவுள் அவதரிப்பது ஏன்?
9 மதுராஷ்டகம்
10 பிறப்பற்றவரின் பிறப்பு
17 கிருஷ்ணருக்குத் தலைவலி
20 ஸ்ரீமதி ராதாராணியின் மகத்துவம்
23 பிரபுபாதர் நூற்றந்தாதி
25 இன்பத்தைத் தேடி...
29 ஸ்ரீமத் பாகவதம்
31 கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி
32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.

**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அலுவலக உதவி:** சுபாத்ம கௌரங்க தாஸ், சதீஷ் குமார்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600 073.
தொலைபேசி: (044) 22272920

**செயல் அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

### நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், தங்களது முகவரியை எமது சந்தா அலுவலகத்திற்கு (கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு), சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. **சந்தா தொகை:** ஒரு வருடம்—ரூ. 160; இரண்டு வருடம்—ரூ. 300; ஐந்து வருடம்—ரூ. 700.

**அனுப்ப வேண்டிய முகவரி:** ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்




### கண்களை இமைக்க இயலவில்லை

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் ஆகஸ்ட் இதழின் அட்டைப் படத்தையும் நடுப் பக்கத்தில் இருந்த படத்தையும் பார்த்த போது என் கண்களை இமைக்கக்கூட நான் மறந்துவிட்டேன். தயவுசெய்து என்னுடைய வாழ்த்துக்களையும் வியப் பையும் ஓவியருக்குத் தெரிவிக்கவும்.

குமார், நாமக்கல்

### தமிழ் நெஞ்சங்களின் சார்பில் நன்றி

தமிழினமே மறந்துபோன நன்னெறி களை திருவள்ளுவரின் திருக்குறள்கள் மூலம் மீண்டும் நினைவுபடுத்திய ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்திற்கு உலகத் தமிழ் நெஞ்சங்களின் சார்பாக மனமார்ந்த பாராட்டுகள். தமிழ் இலக்கியங்களை தொடர்ந்து ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தில் எதிர்பார்க்கிறோம். ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாத இதழ் மேன்மேலும் வளர வாழ்த்துக்கள்.

S.கோவிந்தராஜு, வாழப்பாடி

### சிறைக்குள் ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

*ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்,* ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை வெளிவர காரணமான அனைத்து உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மார்ச்-ஏப்ரல், மே-ஜூன் இரு இதழ்களையும் படித்தேன். மிக அருமையாக இருந்தது. "அசுரர்களின் எதிரி: பக்தர்களின் பாதுகாவலர்" ஸ்ரீதாம் மாயாப்பூரில் பகவான் நரசிம்மர் தோன்றிய வரலாறு ரொம்ப அற்புதமாக இருந்தது.

பக்தர் ஒருவர் இரண்டு இதழ் களையும் கொண்டு வந்து கொடுத்தார். அதனால்தான் எங்களுக்கு ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் நன்றியை அவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்னைப் பற்றிய சிறு குறிப்பு: என் பெயர் K.M. தினேஷ் [பெயர் மாற்றப்பட்டுள்ளது]. திருச்சி மத்திய சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாக உள்ளேன். உயர் நீதிமன்றத்தில் எனது வழக்கு உறுதி செய்யப்பட்டு 1 1/4 வருடத்திற்கு முன்பு இங்கு வந்தேன். உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளேன். 15.03.09 அன்று முதல் இஸ்கான் பூஜையில் கலந்து கொண்டு வருகிறேன். உண்மையில் தண்டனை பெற்று வந்ததற்கு சந்தோஷம்தான் அடைகிறேன். இல்லையெனில் இந்த அரிய பொக்கிஷமான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றி தெரிய வாய்ப்பே இல்லை. நான் P.W.D.இல் Asst. Engineer ஆகப் பணிபுரிந்துள்ளேன். வெளியில் இருந்த வரை ஒரு இஞ்ச் கூட இஸ்கான் பற்றி தெரியாது. இந்த அரிய வாய்ப்பை வழங்கிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு தினமும் (கடந்த 10 மாதங் களாக) காலை 9 மணி முதல் 11 1/2 மணி வரை பூஜை, பகவத் கீதை வகுப்பு, தியான ஸ்லோகங்கள், துளசி கீர்த்தனை, ஆரத்தி நடைபெறுகின்றன. ஞாயிறுதோறும் இருபதிலிருந்து இருபத்தைந்து பேரும், மற்ற தினங்களில் ஏழு, எட்டு பேரும் கலந்து கொள்கிறார்கள். நிறைய நபர்கள் கலந்து கொண்டு கிருஷ்ண உணர்வு பெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. நன்றி.

பகவானின் சேவகன்,
K.M. தினேஷ்,
மத்திய சிறைச்சாலை, திருச்சி

**கேள்விகளும் கருத்துகளும்**

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கருத்துகளைத் தெரிவிக்க சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்தாபக ஆச்சாரியரின் ஆன்மீக உரை

# கடவுள் அவதரிப்பது ஏன்?

## மதங்களுக்கு அப்பாற்பட்டவரான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எல்லா மதங்களின் சாரத்தை உபதேசிப்பதற்காகத் தோன்றுதல்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதரால் 1974ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் தேதியன்று மும்பையில் நிகழ்த்தப்பட்ட உரை.

யதா யதா ஹி தர்மஸ்ய
க்லானிர் பவதி பாரத
அப்யுத்தானம் அதர்மஸ்ய
ததாத்மானம் ஸ்ருஜாம்-யஹம்

“எப்போதெல்லாம் எங்கெல்லாம் தர்மம் சீர்குலைந்து அதர்மம் ஆதிக்கம் செலுத்துகின்றதோ, பரத குலத் தோன்றலே, அப்போதெல்லாம் நான் தோன்றுகின்றேன்.” (பகவத் கீதை 4.7)

### மதம் என்பது நம்பிக்கையல்ல

தர்ம என்னும் சமஸ்கிருத வார்த்தை, ஆங்கிலத்தில் religion (மதம்) என்று மொழிபெயர்க்கப்படுகிறது. religion என்றால், “ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை” என்று அகராதியில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தர்மம் என்னும் சொல், நம்பிக்கையைக் குறிப்பதல்ல. உலகத்தில் ஒரே ஒரு தர்மம் மட்டுமே இருக்க முடியும், ஆனால் பற்பல நம்பிக்கைகள் இருக்கலாம். நீங்கள் ஒரு நம்பிக்கையை ஏற்கலாம், நான் ஒரு நம்பிக்கையை ஏற்கலாம், மற்றொருவர் வேறொரு நம்பிக்கையை ஏற்கலாம். அனைவரின் நம்பிக்கையுமே திருப்திகரமானது என்றால், கிருஷ்ணர் அவதரிப்பதற்கு அவசியம் இல்லையே.

“எனக்கு உங்களுடைய மதம் (நம்பிக்கை) பிடிக்காமல் இருக்கலாம், உங்களுக்கு என்னுடைய மதம் பிடிக்காமல் இருக்கலாம், இருப்பினும் அனைவரின் மதமும் சரியே,” என்று பலர் கூறுகின்றனர். ஆனால், அனைவரின் மதமும் சரியானதே என்றால், கிருஷ்ணர் அதர்மத்தை அழிப்பதற்காகத் தோன்றுவதன் பயன் என்ன? இதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். மதம் என்பது தனிப்பட்டவர்களின் விருப்பமே என்றால், அதர்மம் என்ற சொல் அர்த்தமற்றதாகிவிடும். உதாரணமாக, மிருகங்களைக் கொல்வதை தங்களது மதம் அனுமதிப்பதாக சிலர் கருதுகின்றனர், வேறு சிலரோ மிருகவதையினை அதர்மமாக நினைக்கின்றனர். இதில் யார் சொல்வது சரி? அதனை கிருஷ்ணர் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

### முழுமுதற் கடவுளால் கொடுக்கப்படுவதே தர்மம்

இவ்வாறாக, தர்மம் என்பதை நீங்கள் உண்டாக்க முடியாது—தர்மம் என்பது, நீங்கள் உங்கள் வீட்டில் கற்பனை செய்வதோ, சட்டசபையில்



தீர்மானம் இயற்றி உருவாக்கப்படுவதோ அல்ல. மேற்கத்திய நாடுகளில், ஏன் இந்தியாவில்கூட, அரசின் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், அது தர்மமாக அல்லது சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், கிருஷ்ணர் அத்தகு தர்மத்தைப் பற்றி இங்கு கூறவில்லை. *தர்மம் து ஸாக்ஷாத் பகவத் ப்ரணீதம்,* முழுமுதற் கடவுளால் அளிக்கப்பட்ட கட்டளைகளே தர்மம் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் சட்டங்கள் அதன் அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகின்றன. அச்சட்டங்களை நீங்கள் உங்கள் வீட்டிலிருந்து உருவாக்க முடியாது. உதாரணமாக, வாகனம் ஓட்டுவதற்கான சட்டத்தைப் பொறுத்தவரையில், சில நாடுகளில் "வலதுபுறமாகச் செல்லவும்" என்றும், வேறு சில நாடுகளில், "இடது புறமாகச் செல்லவும்" என்றும் விதி உள்ளது. அப்படியெனில், எது சரி—வலது புறமா? இடது புறமா? இரண்டும் சரியே, எந்த அரசாங்கம் ஆட்சி புரிகிறதோ அதைப் பொறுத்தே அந்த விதிகள். வலது புறமாகச் செல்லுமாறு அரசாங்கம் கூறினால், நீங்கள் அதை ஏற்றாக வேண்டும். இடது புறமாகச் செல்லுமாறு கூறினால், அதையும் நீங்கள் கடைப்பிடித்தாக வேண்டும். "இல்லை, இல்லை. எங்களது நாட்டில் நாங்கள் இடது புறமாகச் செல்கிறோம், நீங்கள் ஏன் வலது புறமாகச் செல்கிறீர்கள்?" எனக் கேள்விகள் கேட்க முடியாது. அத்தகு வாதம் எடுபடாது. அதுபோல, பகவான் என்ன கூறுகிறாரோ, அதுவே மதத்தின் சட்டம், அதுவே தர்மம். நாம் அதனை கடைப்பிடித்தாக வேண்டும்.





குலாப்ஜாமூனின் தர்மம் இனிப்பு; மிளகாயின் தர்மம் காரம். அதுபோல, ஜீவன்களின் தர்மம் தொண்டு செய்வதே

அடுத்த ஸ்லோகத்தில் கிருஷ்ணர் கூறுகிறார்,

*பரித்ராணாய ஸாதூனாம்*
*வினாஷாய ச துஷ்க்ருதாம்*
*தர்ம-ஸம்ஸ்தாபனார்தாய*
*ஸம்பவாமி யுகே யுகே*

"பக்தர்களைக் காத்து, துஷ்டர்களை அழித்து, தர்மத்தின் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காக, நானே யுகந்தோறும் தோன்றுகிறேன்." (பகவத் கீதை 4.8) சட்டத்தின்படி நடப்பவர்களைப் பாதுகாத்து, சட்டத்தை மீறுபவர்களை தண்டிப்பது எவ்வாறு அரசாங்கத்தின் கடமையோ, அதுபோலவே, பக்தர்களைக் காத்து துஷ்டர்களை அழிப்பது கிருஷ்ணரின் செயலாகும்.

## சரணடைவதே தர்மம்

தர்மம் என்பதற்கான மற்றொரு பொருள், "இயற்கையான தன்மை." உதாரணமாக, சர்க்கரை இனிக்கும் என்பதால், அதன் தர்மம் இனிப்பு என்று எடுத்துக் கொள்ளலாம். காரமாக இருக்கும் மிளகாயின் தர்மம் காரத்தன்மை. சர்க்கரை காரமாகவும் மிளகாய் இனிப்பாகவும் மாறினால் அஃது அதர்மம். அதுபோல, உயிர்வாழிகளின் தர்மம் (அல்லது இயற்கையான குணம்) சரணடைவதாகும். நீங்கள் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால், யாராவது ஒருவரிடம் ஒவ்வொருவரும் சரணடைந்திருப்பதைக் காண முடியும். அது மனைவியாகட்டும், குடும்பமாகட்டும், சமூகமாகட்டும், சங்கமாகட்டும், அரசாங்கமாகட்டும்—ஏதோ ஒன்றிடம் (அல்லது ஒருவரிடம்) நாம் சரணடைந்துள்ளோம். உயிர்வாழியின் தன்மை சரணடைந்திருப்பதே என்பதை நீங்கள் எங்கு சென்றாலும் காண முடியும். சரணடைவதைத் தவிர்க்க உயிர்வாழியினால் இயலாது.

## யாரிடம் சரணடைய வேண்டும்?

எனவே, நாம் அனைவரும் சரணடைய வேண்டியவர்களே. ஒருவன் சரியான நபரிடம் சரணடைந்தால், எல்லாம் சரியாக நடக்கும். ஆனால் அவன் தவறான நபரிடம் சரணடைந்தால், பல்வேறு தொல்லைகள் ஏற்படும். யார் அந்த சரியான நபர்? *ஜீவேர ஸ்வரூப ஹய, க்ருஷ்ணேர நித்ய தாஸ,* "நாம் அனைவரும் கிருஷ்ணரின் நித்தியமான தொண்டர்கள்" என்று சைதன்ய மஹாபிரபு கூறியுள்ளார். ஆதலால் நாம் அனைவரும் கிருஷ்ணரிடம் சரணடைய வேண்டும்.

நாம் அனைவருமே சரணடைகிறோம் என்றபோதிலும், நாம் கிருஷ்ணரிடம் சரணடைவதில்லை என்பது துரதிர்ஷ்டமே. இதுவே நமது நோய். இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் அந்த நோயைக் குணப்படுத்த முயற்சி செய்து வருகிறது. மக்கள் கிருஷ்ணரிடம் சரணடையாதபோது, அவர்கள் நிறைய போலிக் கடவுள்களை அல்லது அயோக்கியர்களை உருவாக்கி அவர்களிடம் சரணடைகின்றனர். அதுவே அதர்மம் எனப்படுகிறது. தர்மம் என்றால் கிருஷ்ணரிடம் சரணடைவதே, ஆனால் கிருஷ்ணரிடம் சரணடைவதற்குப் பதிலாக,

நாய்கள், பூனைகள், என பலவற்றிடம் மக்கள் சரணடைகின்றனர். அஃது அதர்மம் என்பதால், அதனைச் சீர்படுத்த 5000 வருடங்களுக்கு முன்பு கிருஷ்ணர் அவதரித்தார்.

பெயரளவிலான இந்து தர்மத்தை நிலைநாட்ட கிருஷ்ணர் தோன்றவில்லை. முழுமுதற் கடவுளான கிருஷ்ணரிடம் சரணடைவதே உண்மையான மதம். யாரிடம் சரணடைய வேண்டும் என்பதை நாம் தற்போது அறியாமல் உள்ளோம். இதுவே பிரச்சனை. தவறான இடத்தில் சரணடைவதால், முழு உலகமும் குழப்பமான நிலையில் உள்ளது.

எதனிடம் அல்லது யாரிடம் நாம் சரணடைந்துள்ளோமோ அதனை நாம் மாற்றியவண்ணம் உள்ளோம்: "இனிமேல் அந்தக் கட்சி வேண்டாம். இந்தக் கட்சியை அணுகலாம்." அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்று கட்சிகளை மாற்றிக் கொண்டே இருப்பதால் என்ன இலாபம்? நீங்கள் அந்தக் கட்சியிடம் சரணடைந்தாலும் சரி, இந்தக் கட்சியிடம் சரணடைந்தாலும் சரி, கிருஷ்ணரிடம் சரணடையாத வரை உங்களுக்கு அமைதி கிடைக்காது. இதுதான் கருத்து. ஒன்றைச் சமாளிக்க முடியாமல் மற்றதை தேர்ந்தெடுத்து, அதன் மூலம் பிரச்சனை மிகவும் மோசமாகுவதைத்தான் நாம் காண்கிறோம்.

## தர்மத்தின் பக்குவநிலை

எனவே, பகவத் கீதையின் இறுதியில் கிருஷ்ணர் பின்வருமாறு அறிவுரை கூறுகிறார்,

*ஸர்வ தர்மான் பரித்யஜ்ய*
*மாம் ஏகம் ஷரணம் வ்ரஜ*
*அஹம் த்வாம் ஸர்வ-பாபேப்யோ*
*மோக்ஷயிஷ்யாமி மா ஷுச:*

"இவ்வெல்லா தர்மங்களையும் கைவிட்டு என்னிடம் சரணடைவாயாக, நான் உன்னைப் பாதுகாப்பேன். பயப்படாதே." (பகவத் கீதை 18.66) இதுவே தர்மத்தின் பக்குவநிலை. மேலும், ஸ்ரீமத் பாகவதத்தில் (1.2.6), *ஸ வை பும்ஸாம் பரோ தர்மோ யதோ பக்திர் அதோக்ஷஜே*, "அதோக்ஷஜரிடம் சரணடைவதே முதல் தரமான தர்மம் (அல்லது உயர்ந்த தர்மம்)," என்று கூறப்பட்டுள்ளது. *அதோக்ஷஜ* என்றால் தெய்வீகமானவர், பரம புருஷர் என்று பொருள்; இது கிருஷ்ணரைக் குறிப்பதாகும். மேலும், ஒருவரது சரணாகதி, *அஹைதுகி*, *அப்ரதிஹதா* நிலையில் இருக்க வேண்டும் என்றும் பாகவதம் கூறுகின்றது. *அஹைதுகி* என்றால், "எவ்வித உள்நோக்கமும் இன்றி" என்று பொருள். "கிருஷ்ணர் எனக்கு இந்தஇந்த விஷயங்களைக் கொடுத்தால், நான் அவரிடம் சரணடைவேன்," என்று நாம் கூறக் கூடாது. நமது சரணாகதி எவ்வித எதிர்பார்ப்புமின்றி இருக்க வேண்டும். அடுத்ததாக, *அப்ரதிஹதா*—கிருஷ்ணரிடமான நமது சரணாகதி இடைவிடாது இருத்தல் வேண்டும். பக்தித் தொண்டு தடுத்து நிறுத்தப்பட முடியாதது. நீங்கள் உண்மையாகவே கிருஷ்ணரிடம் சரணடைய விரும்பினால், அதில் எந்தத் தடையும் இருக்க முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் சரணடைந்திருக்க முடியும். இவ்வாறு நீங்கள் உங்களது உடல், மனம், மற்றும் ஆத்மாவை முழுவதுமாக கிருஷ்ணருக்கு அர்ப்பணம் செய்தால், பூரண திருப்தியை உங்களால் உணர முடியும்—*யயாத்மா ஸுப்ரஸீததி*. இதுவே கிருஷ்ண உணர்வாகும்.

## புலனின்பமே குறிக்கோளாக இருக்கக் கூடாது

துரதிர்ஷ்டவசமாக, கிருஷ்ணரிடம் அவருடைய திருப்திக்காக சரணடையாமல், நமது திருப்திக்காக வேறு எவரிடமோ சரணடைகிறோம். மந்திரி பதவி, அல்லது வேறு பதவிக்காக நாம் ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் சேருகிறோம். அந்தப் பதவிகளே நமது குறிக்கோள்—நாட்டிற்குத் தொண்டு செய்வதல்ல. யாராவது ஒருவர், அல்லது இருவர் அந்த எண்ணத்துடன் கட்சியில் சேரலாம். ஆனால் பொதுவாக நமது இலக்கு, பதவியும் அதிகாரமுமே. எனவே, கட்சிக்கு யாரும் தொண்டாற்றுவதில்லை; தங்களது சொந்தக் குறிக்கோளையே பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

கற்றறிந்த பண்டிதர் ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார்: *காமாதினாம் கதி ந கதிதா பாலிதா துர்நிதேஷாஸ:*, நம்முடைய பெயரளவுத் தொண்டுகள் அனைத்தும் காமம், கோபம், பேராசை, மாயை, போதைப் பொருட்கள், பொறாமை ஆகியவற்றிற்கான தொண்டுகளே. இவையனைத்தும் நமது எஜமானர்கள்; சிலர் காமத்திற்கும், சிலர் கோபத்திற்கும், வேறு சிலர் பேராசைக்கும் மற்றவற்றிற்கும் அடிமைகளாகின்றனர். இவ்வாறாக நாம் நமது புலன்களுக்குத் தொண்டாற்றி வருகிறோம், எந்தவொரு குறிப்பிட்ட நபருக்கும் அல்ல. நாம் அலுவலகத்திற்குச் செல்லும்போது, அங்குள்ள முதலாளிக்காகத் தொண்டு செய்கிறோம்; ஆனால் உண்மையில் நாம் முதலாளிக்குத் தொண்டு செய்வதில்லை, அவர் தரும் பணத்திற்குத்தான் தொண்டு செய்கிறோம். "நாளையிலிருந்து உனக்கு சம்பளம் கிடையாது," என அவர் கூறினால், "நல்லது. விடைபெறுகிறேன்" என நாம் கூறிவிட்டு வந்து விடுவோம். நாம் பணத்திற்காக உழைக்கிறோம், அந்தப் பணத்தைக் கொண்டு நமது புலன்களைத் திருப்தி செய்யலாம். எனவே, முடிவில் பார்த்தால், நாம் நமது புலன்களுக்காகவே தொண்டு செய்து கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொருவரும் புலன்களுக்குத் தொண்டு செய்து கொண்டுள்ளனர். கிருஷ்ணர் அதனை, *தர்மஸ்ய க்லானி:*, அதர்மம் என்று கூறுகிறார். நாம் நமது

**யாரிடம் சரணடைய வேண்டும் என்பதை அறியாமல் இருப்பதே நமது பிரச்சனை. தவறான இடத்தில் சரணடைவதால், முழு உலகமும் குழப்பமான நிலையில் உள்ளது.**

**பௌதிக சேவையில் ஈடுபட்டு—குடும்பம், சமூகம் அல்லது எதுவானாலும் சரி, அதன் மூலமாக யாரையும் திருப்தி செய்ய இயலாது. "நான் முழுவதுமாகத் திருப்தியடைந்துவிட்டேன்" என்று எவரும் ஒருபோதும் கூற மாட்டார்கள்.**

புலன்களுக்குத் தொண்டு செய்தால், அஃது அதர்மம்; மாறாக, கிருஷ்ணரின் புலன்களுக்கு நாம் தொண்டு செய்தால், அதுவே தர்மம் எனப்படுகிறது. இதையே பகவத் கீதையில் கிருஷ்ணர் அறிவுறுத்துகிறார்.

### உண்மையான பக்தி

பகவத் கீதையில், அர்ஜுனன் நமது நன்மைக்காக ஒரு சாதாரண மனிதனைப் போல நடந்து கொண்டான். கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்றும் அவருக்கு தான் தொண்டு செய்ய வேண்டும் என்றும் அர்ஜுனனுக்குத் தெரியும். அவன் சிறந்த பக்தன், தனது வாழ்நாள் முழுவதையும் கிருஷ்ணரின் தொண்டில் அர்ப்பணித்தவன். பகவத் கீதையின் இறுதியில் கிருஷ்ணரின் அறிவுரைகளை ஏற்றுக் கொண்ட அர்ஜுனன், "சரி, தங்களின் விருப்பப்படி நான் போரிடுகிறேன்" என்று கூறினான். இதுவே உண்மையான பக்தி.

*ஸர்வோபாதி வினிர்முக்தம்*
*தத்-பரத்வேன நிர்மலம்*
*ஹ்ருஷிகேன ஹ்ருஷிகேஷ*
*ஸேவனம் பக்திர் உச்யதே*

"பக்தி என்றால், போலியான அடையாளங்களைத் துறந்து, நமது புலன்களைக் கொண்டு பகவான் கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வ தாகும்." "நான் அமெரிக்கன்," "நான் இந்தியன்," "நான் பிராமணன்," "நான் சத்திரியன்" போன்ற போலியான அடையாளங்களிலிருந்து ஒருவன் விடுபட வேண்டும். இந்த அடையாளங்கள் அனைத்தும் உடல் சம்பந்தப்பட்டதால், இவற்றிலிருந்து வெளிவருதல் அவசியம்.

தற்போதைய நடைமுறையில் பார்த்தால், உலகிலுள்ள ஒவ்வொருவரும் உடல்சார்ந்த வாழ்க்கையில், போலி யான அடையாளங்களுடன் அவதிப் பட்டுக் கொண்டுள்ளனர். அந்தப் போலி யான அடையாளங்களின் அடிப்படையில் அவர்கள் பலதரப்பட்ட மதங்களை உருவாக்கியுள்ளனர். அவை உண்மை யான மதங்கள் அல்ல. எனவே, பகவத் கீதையின் இறுதியில் கிருஷ்ணர் கூறுகிறார்: *ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஷரணம் வ்ரஜ,* "எல்லா மதங்களையும் துறந்து என்னிடம் மட்டுமே சரணடைவாயாக." (பகவத் கீதை 18.66)

பகவத் கீதை இந்து மதத்தையோ கிறிஸ்துவ மதத்தையோ இஸ்லாமிய மதத்தையோ சார்ந்ததல்ல. இஃது எல்லா மதங்களின் சாரம், பரம புருஷ பகவானுக்கும் அவரது அம்சமாகிய ஆத்மாவிற்கும் இடையிலான அன்புப் பரிமாற்றத்தின் விளக்கம். கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்டு அவரின் தாமரைத் திருவடிகளை சரணடைவதே, பக்தி, அல்லது உண்மையான மதம் எனப்படுகிறது.

### அதர்மத்தை அழிக்க கிருஷ்ணர் தோன்றுதல்

இத்தகைய மதத்தை மனித சமுதாயம் எப்போது மறந்து போகிறதோ, அப்போது மக்கள் கடவுளிடம் வெறுப்படைகின்றனர். கடவுளைப் புறக்கணிக்கும் அவர்கள் கடவுளைப் போல தாங்களும் அனுபவிக்கலாம் என்று நினைக்கின்றனர். அதுவே *தர்மஸ்ய க்லானி*, நெறிதவறிய மதம் எனப்படுகிறது. இயற்கையாகவே நாம் ஒவ்வொருவரும் இந்த பௌதிக உலகத்தை அனுபவிப்பதற்காகவே இங்கு வந்துள்ளோம். ஆனால் பௌதிக இன்பம் என்பது உண்மையான இன்பமல்ல. உண்மையான இன்பம் என்பது ஆன்மீக இன்பத்தை அனுபவிப்பதாகும். அது கிருஷ்ணரிடம் சரணடைவதன் மூலம் பெறப்படுகிறது. *தர்மஸ்ய க்லானி:* ஏற்படும்போது, அதாவது, நமது ஆன்மீக இயற்கையைப் புரிந்துகொள்வதில் முரண்பாடு ஏற்படும்போது, மக்கள் தங்களது உண்மையான இன்பத்தை மறந்துவிடுகின்றனர். அப்போது கிருஷ்ணர் அவதரித்து தர்மத்தினை சீர்படுத்துகின்றார்.

### கிருஷ்ணர் மட்டுமே திருப்தியடைபவர்

பௌதிக சேவையால் ஒருவரையும் திருப்தி செய்ய முடியாது. மகாத்மா காந்தி அவர்கள் தனது ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி இந்தியாவிற்கு சேவை செய்தார். ஆனால் அவரால் அனைவரையும் திருப்திப்படுத்த முடியவில்லை: யாரோ ஒருவர் அவரைக் கொன்று விட்டார். பௌதிக சேவையில் ஈடுபட்டு—குடும்பம், சமூகம் அல்லது எதுவானாலும் சரி, அதன் மூலமாக யாரையும் திருப்தி செய்ய இயலாது. "நான் முழுவதுமாக திருப்தியடைந்துவிட்டேன்" என்று எவரும் ஒருபோதும் கூற மாட்டார்கள்.

ஆனால் நாம் கிருஷ்ணருக்குத் தொண்டு செய்ய முயற்சி செய்தால், அவர் மிகவும் கருணை வாய்ந்தவர் என்பதால், நமது சிறிய சேவையையும்


ஏற்றுக் கொண்டு, நமது வாழ்க்கையை வெற்றிகரமாக்குகிறார். உதாரணத்திற்கு, கிருஷ்ணர் குழந்தையாக இருந்தபோது, பூதனை என்ற அரக்கி அவரைக் கொல்ல முயன்றாள். "நான் எனது மார்பிலே விஷத்தைத் தடவி கிருஷ்ணருக்குப் பாலூட்டினால், அவர் இறந்து விடுவார்"--இதுவே அவளது திட்டம். ஆனால் பாலூட்டிய பூதனையின் உயிரை உறிஞ்சி எடுத்து விட்டார் கிருஷ்ணர். இருப்பினும், அவள் தனக்குப் பாலூட்டியதால் தனது தாயிக்கு சமம் என்று கருதிய அவர், ஆன்மீக உலகில் தனது தாயாக அவளுக்கு உயர்வு கொடுத்தார். அதுவே கிருஷ்ணரின் கருணை.

கருணையே நிரம்பிய அவர், நீங்கள் தவறான நோக்கத்தில் சேவை செய்தாலும் உங்கள் சேவையை ஏற்றுக் கொள்கிறார். பிறகு ஏன் மற்றவர்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டும்? நீங்கள் கிருஷ்ணருக்கு சேவை செய்தால், மற்ற அனைவருக்கும் (குடும்பம், சமூகம், நாடு என அனைவருக்கும்) சேவை செய்தவராவீர். மரத்தின் வேருக்கு நீரூற்றுவதால் முழு மரமும் செழிப்படைகிறது. அதுபோல அனைத்திற்கும் மூலமாக விளங்கும் கிருஷ்ணருக்கு சேவை செய்வதால் மற்ற அனைவருக்கும் சேவை செய்தவராவீர்.

### மிகவுயர்ந்த சமூக சேவை

கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஒரே குறிக்கோள், கிருஷ்ணருக்கு சேவை செய்வதே. இருப்பினும் நாங்கள் சமூக சேவையும் செய்கிறோம். எப்படியெனில், ஒருவர் கிருஷ்ண பக்தரான உடனேயே, போதை வஸ்துக்கள், தவறான உடலுறவு, அசைவ உணவு மற்றும் சூதாட்டத்தைத் துறந்து விடுகிறார். இது சமூக சேவையல்லவா? இதுதான் சிறந்த சமூக சேவை. அமெரிக்க அரசாங்கம் எங்கள் இயக்கத்தை மிகவும் பாராட்டுகிறது. அமெரிக்காவிலுள்ள பெரும்பாலான இளைய தலைமுறையினர் LSD போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றனர். எங்கள் இயக்கத்திற்கு வந்ததும் அவர்கள் அதனை நிறுத்திவிடுகின்றனர். அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்தாலும், அதனை அவர்களால் தடுக்க முடியவில்லை. கிருஷ்ண உணர்வினை அளிப்பதன் மூலம் எளிதாக இவற்றைச் செய்து விடலாம்.

இந்த தர்மத்தை ஏற்று, கிருஷ்ணரிடம் சரணடைவதால் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்பது உண்மை. கிருஷ்ண உணர்வு, சமுதாயத்திற்கு மிகவும் அவசியத் தேவையாகும். இதனை மக்களுக்கு போதிக்கவே கிருஷ்ணர்




அவதரிக்கிறார். (யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்: பவதி பாரத) கிருஷ்ணரும் கிருஷ்ணரின் உபதேசங்களும் ஒத்த தன்மையுடையவை. கிருஷ்ணர் தற்போது இல்லையே என எண்ண வேண்டாம், அவர் தனது உபதேசமாகிய பகவத் கீதையின் உருவில் எப்போதும் இருக்கின்றார். அந்த உபதேசங்களை ஏற்று அதன்படி நடப்பதால், நாம் மகிழ்ச்சியுடன் வாழ முடியும். இதுவே கிருஷ்ண உணர்வாகும்.

(தமிழாக்கம்: அமுதவல்லி தேவி தாஸி)

---

## என்றும் புதுமையான கிருஷ்ண கதை

ஓ பிராமணரே, பூவுலக மாசுகளை போக்கவல்லதும், வசீகரமானதும், என்றும் பசுமையானதுமான பகவானைப் பற்றிய பக்திக் கதைகளைக் கேட்டு, 'போதும்' என்று திருப்தியடைந்த அனுபவசாலி உண்டோ?
(ஸ்ரீமத் பாகவதம் 10.52.20)



# மதுராஷ்டகம்

## ஸ்ரீ வல்லபாசாரியரால் அருளப்பட்டது

### (மதுரம் என்றால் இனிமை, சுவையானது என்று பொருள்)

அதரம் மதுரம் வதனம் மதுரம்
நயனம் மதுரம் ஹஸிதம் மதுரம்
ஹ்ருதயம் மதுரம் கமனம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (1)

உதடுகள் மதுரம், திருமுகம் மதுரம், கண்கள் மதுரம், புன்னகை மதுரம், இதயம் மதுரம், நடையும் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

வசனம் மதுரம் சரிதம் மதுரம்
வஸனம் மதுரம் வலிதம் மதுரம்
சலிதம் மதுரம் ப்ரமிதம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம்
(2)

பேச்சு மதுரம், குணங்கள் மதுரம், உடைகள் மதுரம், இடையும் மதுரம், அசைவு மதுரம், திரிதல் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

வேணுர் மதுரோ ரேணுர் மதுர:
பாணிர் மதுர: பாதௌ மதுரௌ
ந்ருத்யம் மதுரம் ஸக்யம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (3)

குழல் மதுரம், (பாதத்) தூளி மதுரம், கரங்கள் மதுரம், பாதங்கள் மதுரம், நடனம் மதுரம், நட்பும் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

கீதம் மதுரம் பீதம் மதுரம்
புக்தம் மதுரம் ஸுப்தம் மதுரம்
ரூபம் மதுரம் திலகம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (4)

கானம் மதுரம், பீதம் (மஞ்சள் பட்டாடை) மதுரம், உண்ணுதல் மதுரம், உறங்குதல் மதுரம், ரூபம் மதுரம், திலகம் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

கரணம் மதுரம் தரணம் மதுரம்
ஹரணம் மதுரம் ரமணம் மதுரம்
வமிதம் மதுரம் ஷமிதம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (5)

செயல்கள் மதுரம், (ஜடவுலகிலிருந்து) காத்தல் மதுரம், திருட்டு மதுரம், காதல் மதுரம், அர்ப்பணம் மதுரம், அமைதியும் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

குஞ்ஜா மதுரா மாலா மதுரா
யமுனா மதுரா வீசீ மதுரா
ஸலிலம் மதுரம் கமலம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (6)

குஞ்ஜம் (பகவானின் ஓர் அணிகலன்) மதுரம், (பூ) மாலை மதுரம், யமுனை மதுரம், சிற்றலைகள் மதுரம், தண்ணீர் மதுரம், கமலம் (தாமரை) மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

கோபீ மதுரா லீலா மதுரா
யுக்தம் மதுரம் புக்தம் மதுரம்
ஹ்ருஷ்டம் மதுரம் ஷிஷ்டம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (7)

கோபியர் மதுரம், லீலைகள் மதுரம், சேர்க்கை மதுரம், உணவு மதுரம், களிப்பு மதுரம், பழக்கம் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.

கோபா மதுரா காவோ மதுரா
யஷ்டிர் மதுரா ஸ்ருஷ்டிர் மதுரா
தலிதம் மதுரம் ஃபலிதம் மதுரம்
மதுராதி-பதேர் அகிலம் மதுரம் (8)

கோபர் மதுரம், பசுக்கள் மதுரம், கைத்தடி மதுரம், படைத்தல் மதுரம், அழித்தல் மதுரம், பலனளித்தல் மதுரம்—மதுரங்களின் மன்னருக்கு அனைத்தும் மதுரம்.





# பிறப்பற்றவரின் பிறப்பு

வழங்கியவர்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்

எல்லாத்தோற்றங்களுக்கும்மூலமாக விளங்கும் இறைவன், மனிதர்களுக்கு மத்தியில் தோன்றும்போது அது குழப்பக்கூடியதாக இருப்பதால், அவரது பிறப்பு குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு இப்பூவுலகில் பிறந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரத் திருநாளை நாம் கொண்டாடி வரும் இத்தருணத்தில், அந்த பிறப்பற்ற இறைவனின் பிறப்பு குறித்த விவரங்கள், இதோ இங்கே...

## இறைவன் பிறப்பற்றவர்

பிரமிக்கத் தூண்டும் மலைகள், வற்றாத நதிகள், பரந்து விரிந்திருக்கும் கடல்கள், உயிர் வாழ வைக்கும் காற்று, வெளிச்சம் தரும் சூரியன், குளுமையை வழங்கும் சந்திரன், செடிகொடிகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், மற்றும் மனிதர்கள் உட்பட நாம் காண்பவற்றையும் காணாதவற்றையும் படைத்தவர் இறைவன். அவரிடமிருந்தே அனைத்தும் தோன்றின—இதனை எந்த மதப் பிரிவினரும் மறுப்பதற்கில்லை. வேதாந்த சூத்திரமும் (1.1.2) இதனை, *ஜன்மாத்யஸ்ய யத:*, அதாவது, யாரிடமிருந்து எல்லாம் தோன்றியதோ அவரே முழுமுதற் கடவுள் என்று உறுதி செய்கின்றது.

அனைத்தும் அமைவதற்கு ஆதாரமாக விளங்கும் அந்த முழுமுதற் கடவுள், மனிதர்களுக்கு மத்தியில் பிறக்க முடியுமா? எனும் கேள்வி பல்வேறு மக்களின் மனதில் எளிதாக எழக்கூடிய ஒன்று. ஆனால் அந்த வினாவிற்கான விளக்கங்களும் விடைகளும் பற்பல.

## பிறப்பற்றவரால் பிறக்க முடியாதா?

கடவுள் எல்லாவற்றையும் படைத்தவர்; அவரைப் படைத்தவர் என்று எவரும் இல்லை, இருக்கவும் முடியாது. அவ்வாறு அவரைப் படைத்தவர் என்று எவரேனும் இருந்தால், அந்த நபரே கடவுளாக இருக்க வேண்டும். மேலும், பிறத்தல் என்றால் அங்கு தாய்தந்தையர் அவசியம்; இறைவன் பிறப்பதாக எடுத்துக் கொண்டால், அவரது தாய் தந்தையர் இறைவனைப் படைத்தவராக ஆகிவிடுவர். இதனை காரணமாகக் கொண்டு, இறைவன் பிறக்க முடியாதவர் என்று முடிவு செய்யும் சில பிரிவினர், அவரது பிறப்பினை முற்றிலுமாக ஒதுக்கி விடுகின்றனர்.



*மலைகள், நதிகள் உட்பட நாம் காண்பவற்றையும் காணாதவற்றையும் படைத்தவர் இறைவனே. அவரின் பிறப்பு எப்படி சாத்தியம்?*

இறைவன் பிறப்பற்றவர் என்பது உண்மைதான். ஆனால் 'இறைவன் பிறக்க முடியாதவர்' என்னும் கருத்தில் இருக்கும் பிரச்சனை என்னவெனில், 'எல்லாவற்றையும் செய்யவல்ல' இறைவனின் திறனை அது குறைத்து விடுகிறது. இறைவனால் ஆகாத காரியம் ஏதுமில்லை, அவ்வாறு ஏதுமிருத்தல் சாத்தியமும் அல்ல. அவரால் ஒரு செயலைச் செய்ய முடியாது என்று நாம் கூறினால், அவர் இறைவன் என்பதே அர்த்தமற்றதாகிவிடும்.

எனவே, பிறக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்துவிட்டால், அவரால் பிறக்க முடியாதா என்ன? அப்படி அவரால் பிறக்க முடியாவிட்டால், இறைவனாக இருப்பதற்கான சக்தி அவரிடம் இல்லை என்றாகிவிடும். எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் சக்தி படைத்த இறைவன் தனது பிறப்பையும் கட்டுப்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். இவ்வாறாக, இறைவன் பிறக்க முடியாதவர் என்னும் கருத்து உண்மையல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மேலும், பிறப்பற்ற இறைவன் பிறப்பதை பகவத் கீதையும் உறுதி செய்வதால், அதனை மறுப்பதற்கு இடமில்லை.

## பிறப்பற்றவரது பிறப்பின் தன்மைகள்

இறைவன் பிறக்கின்றார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், அவருக்கென்று தாய்தந்தையரும், அவருக்கென்று பிறந்தநாளும், அவருக் கென்று ஒரு பெயரும், அவருக்கென்று ஓர் உடலும், அவருக்கென்று சில குணங்களும், அவருக்கென்று சில செயல்களும் இருக்கின்றன. அவற்றை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்:

அஜோ (அ)பி ஸன் அவ்யயாத்மா
பூதானாம் ஈஷ்வரோ (அ)பி ஸன்
ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய
ஸம்பவாம்-யாத்ம-மாயயா

"நான் பிறப்பற்றவனாக இருந்தாலும், எனது திவ்யமான உடல் அழிவற்றதாக இருந்தாலும், உயிர்வாழிகள் அனை வருக்கும் நானே இறைவனாக இருந் தாலும், நான் எனது சுயமான திவ்ய உருவில் ஒவ்வொரு யுகத்திலும் தோன்று கின்றேன்." (பகவத் கீதை 4.6)

இறைவனின் பிறப்பைப் புரிந்து கொள்வதில் இருக்கும் எல்லாவித ஐயங் களும் மேற்கூறப்பட்டுள்ள பகவத் கீதை ஸ்லோகத்தின் மூலம் தெளிவுபெறுவது உறுதி. திவ்யமான உடலைப் பெற்றுள்ள இறைவன், அந்த சுய உருவத்தில் தனது சொந்த சக்தியின் மூலம் பிறக்கின்றார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் நமது எல்லா சந்தேகங்களும் நீங்கித் தெளிவடைகின்றோம்.

## இறைவனுக்கென்று ஓர் உடல்

இறைவன் இவ்வுலகில் தோன்றி லீலைகள் புரியும்போது, அவர் பௌதிக உடலையும் பௌதிக குணங்களையும் ஏற்று வருவதாக அறிவற்றவர்கள் சிலர் எண்ணுகின்றனர். பௌதிக இயற்கைக்கு எஜமானராக விளங்கும் இறைவன், அந்த பௌதிக இயற்கைக்கு உட்பட்டவரல்ல என்பதைப் புரிந்துகொள்வது கடினமல்ல. அவரது உடல் பௌதிகமானதும் அல்ல, அவர் ஜட இயற்கையின் முக்குணங்களுக்கு உட்பட்டவருமல்ல.

இறைவனுடைய உடல் திவ்யமானது; திவ்யமானது என்றால் இந்த ஜடவுலகத்தின் விதிகளுக்கும் குணங்களுக்கும் அப்பாற்பட்டது. அவ்வுடல் **ஸத்-ஸித்-ஆனந்தம்**, அதாவது, பூரண அறிவும் ஆனந்தமும் நிறைந்த நித்திய உடல் என்று கூறப்படுகிறது. பூரண ஆன்மீகமயமான அந்த உடலில் ஆன்மீக உலகில்

| கிருஷ்ணரின் பிறப்பு | ஜீவனின் பிறப்பு |
|---|---|
| சொந்த விருப்பத்தின் அடிப்படையில் பிறக்கின்றார் | கர்மாவின் அடிப்படையில் கட்டாயத்தின்படி பிறக்கின்றது |
| தனது சுய அந்தரங்க சக்தியின் மூலமாகப் பிறக்கின்றார் | கிருஷ்ணரின் பகிரங்க சக்தியின் மூலமாகப் பிறக்கின்றது |
| முற்றிலும் ஆன்மீக உடலில் தோன்றுகிறார் | பௌதிக உடலை ஏற்று பிறக்கின்றது |
| இயற்கையின் முக்குணங்களுக்கு முற்றிலும் அப்பாற்பட்டவர் | முக்குணங்களுக்கு உட்பட்டு ஜீவன் பிறக்கின்றது |
| தனது தாய்தந்தையரை தானே தேர்வு செய்கிறார் | கர்மாவின் அடிப்படையில் தாய்தந்தையரைப் பெறுகின்றது |
| கர்மாவின் பாதிப்பு துளியும் கிடையாது | முற்றிலும் கர்மாவினால் பாதிக்கப்பட்டு பிறக்கின்றது |
| மனிதரைப் போல (அல்லது மீன், ஆமை, பன்றி என எப்படித்) தோன்றினாலும், முற்றிலும் திவ்யமானவர் | சாதாரண அழியக்கூடிய உடலை உடையது |

நித்தியமாக வீற்றிருக்கும் அந்த இறைவன், இப்பூவுலகிற்கு அதே உடலுடன் வருகின்றார். அவ்வாறு அவர், இங்கு தோன்றும்போது, அவருக்கு அவதாரம் (இறங்கி வருபவர்) என்று பெயர்.

## இறைவனுக்கென்று சில பெயர்கள்

இறைவன் ஜடவுலகத்தினுள் அவதரிக்கும்போது, இங்குள்ள அனைத்து ஜீவன்களும் அவரால் கவரப்படுகின்றன. அனைத்து உயிர்களையும் கவரக் கூடியவராக இருப்பதால், அவருக்கு கிருஷ்ணர் (எல்லாரையும் கவரக் கூடியவர்) என்று பெயர். மேலும், அவருடைய ஏனைய குணங்களையும், ரூபத்தையும், செயல்களையும் வைத்து அவருக்குப் பற்பல பெயர்கள் உண்டு. உதாரணமாக, அவரது திருமேனி கார்மேக வண்ணத்தில் இருப்பதால் அவருக்கு சியாமசுந்தரர் என்று பெயர்; அவர் தனது பக்தர்களைக் காப்பவராக இருப்பதால் அவருக்கு பக்தவத்ஸலர் என்று பெயர்; மேலும், அவர் அன்னை யசோதையின் கயிற்றால் கட்டப்பட்டதால் அவருக்கு தாமோதரர் என்று பெயர்—இதுபோன்று அவருக்குக் கோடிக் கணக்கான திருநாமங்கள் உண்டு.

## இறைவனுக்கென்று ஒரு தாய் தந்தையர்

அந்த முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர் இப்பூவுலகில் தோன்றும் போது, தனது சுய விருப்பத்தின்படி தாய்தந்தையரைத் தேர்ந்தெடுத்து அவர்களின் மூலமாகத் தோன்றுகிறார். சில சமயங்களில், அவர் தாய் தந்தையரின் உதவியின்றியும் தோன்றுகிறார். உதாரணமாக, அவர் நரசிம்மராக அவதரித்தபோது அவருக்குத் தாய்தந்தையர் கிடையாது; தாய் தந்தையருடன் வாழும் வாழ்க்கையை அனுபவிக்க விரும்பிய கிருஷ்ணர், தேவகி வசுதேவரைத் தனது பெற்றோராகத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அருள்பாலித்தார். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவெனில், தேவகி வசுதேவரைப் பெற்றோராகக் கொண்டு பிறந்தபோதிலும், தேவகியும் வசுதேவரும் கிருஷ்ணரைப் படைத்தவர்கள் என்பது பொருளல்ல—திவ்யமான முறையில் பிறந்த அவர், எப்போதும் பிறப்பற்றவராகவே திகழ்கிறார். தேவகி வசுதேவரின் பிரார்த்தனையை நிறைவேற்ற அவர்களது இடைவிடாத வேண்டுகோளின்படி, அவர் அவர்களுக்கு மகனாகத் தோன்றினார்.



## இறைவனுக்கென்று ஒரு பிறந்தநாள் (ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி)

முழுமுதற் கடவுள் இப்பூவுலகில் தோன்றவுள்ளார் என்பதை முன்கூட்டியே அறிந்த இதர தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, சிவபெருமான் மற்றும் பிரம்மதேவரின் தலைமையில் அவருக்கு பிரார்த்தனைகளைச் செலுத்தினர். பின்னர், கிருஷ்ணர் தோன்றுவதற்கான நேரம் வந்தவுடன், அவருக்குத் தொண்டு புரியும் நோக்கத்துடன் எல்லா கிரக அமைப்புகளும் மிகவும் சுபமாகத் திகழ்ந்தன. கமானிக்யா எனும் ஜோதிட நூலில் அந்த கிரக அமைப்புகள் மிகவும் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் தோன்றியபோது இருந்த நேர்த்தியான நேரம், 'ஜெயந்தி' என்று அறியப்படுவதால், கிருஷ்ணரின் பிறந்த நாளை நாம் 'கிருஷ்ண ஜெயந்தி' என்று அழைக்கின்றோம். 'ஜெயந்தி' என்னும் சொல், கிருஷ்ணரின் பிறந்தநாளுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணர் சாதாரணக் குழந்தையைப் போன்று பிறக்கவில்லை. நான்கு கைகளுடன் அதி அற்புதமான ரூபத்தில் தோன்றியதன் மூலம், தான் முழுமுதற் கடவுள் என்பதை அவர் நிரூபித்தார். (கிருஷ்ணர் தோன்றிய சூழ்நிலையின் விளக்கம் மறுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது) சாதாரணக் குழந்தைகளைப் போன்று ரத்தத்தில் தோய்ந்தோ, அழுதுகொண்டோ அவர் பிறக்கவில்லை. மாறாக, மலர்ந்த

# கிருஷ்ணர் பிறந்த சூழ்நிலை

கிருஷ்ணர் தன் திருவுள்ளத்தின்படிப் பிறக்கிறார். அவர் அவதரிப்பதற்கான காலம் வந்ததும் கிரக நிலைகள் சுபமானவையாக விளங்கின. பிரம்மாவின் நேரடியான மேற்பார்வையில் இருப்பதும், உயர்வான பலன்களைத் தருவதுமான ரோகிணி என்ற நட்சத்திரத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. கிருஷ்ணர் பிறந்தபோது எல்லாம் சுபமாக அமையும் வகையில் கிரகங்கள் தம்மைத் தாமே நிலைப்படுத்திக் கொண்டன.

அந்த வேளையில், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, எல்லாத் திசைகளிலும், எங்கும் அமைதியும் செழிப்பும் நிலவின. சுபமான நட்சத்திரங்கள் வானில் காணப்பட்டன. நிலப்பரப்பில் எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும், எல்லோருடைய மனங்களிலும் நல்லது நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றின. நதிகளில் நீர் நிரம்பி ஓடியது, ஏரிகளில் அழகிய தாமரை மலர்கள் பூத்திருந்தன. வனங்களில் அழகிய பறவைகளும் மயில்களும் நிறைந்து காணப்பட்டன. அப்பறவைகள் இனிய குரல்களில் இசைத்தன, மயில்கள் தம் ஜோடிகளுடன் நடனமாடின. காற்று, மலர்களின் நறுமணங்களைத் தாங்கியபடி மிகவும் இனிமையாக வீசியது. அஃது உடலுக்கு இதமாய் இருந்தது. மனைகளில் வேள்வித் தீ வளர்த்த அந்தணர்கள் தம்மனைகளில் மங்களம் நிறைந்திருப்பதை உணர்ந்தார்கள். அசுரர்களின் தொல்லை காரணமாக அவர்களின் இல்லங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹோமாக்னி இப்போது மீண்டும் துவக்கப்பட்டது. வேள்விகள் தடை செய்யப்பட்டிருந்தபோது அந்தணர்கள் மனத்திலும், அறிவிலும், செயலிலும் குன்றியிருந்தார்கள். ஆனால், புருஷோத்தமரான முழுமுதற் கடவுளின் வருகையை அறிவிக்கும் திவ்ய ஒலி அலைகள் அவர்களின் காதுகளில் விழுந்ததால், கிருஷ்ணர் தோன்றவிருந்த அத்தருணத்தில் அவர்கள் மனமகிழ்வுற்றார்கள்.

கந்தர்வர்களும் கின்னரர்களும் கீதம் இசைத்தனர்; சித்தர்களும் சாரணர்களும் முழுமுதற் கடவுளைத் துதித்தனர். ஸ்வர்க லோகங்களில் தேவர்களும் அவர்களின் மனைவியரும் அப்ஸரஸ்களும் நர்த்தனமாடினர்.

மகா முனிவர்களும் தேவர்களும் மனம் மகிழ்ந்து மலர் தூவினார்கள். கடற்கரைகளில் அலைகள் மென்மையாக ஒலித்தன. கடலின் மேல் காணப்பட்ட மேகங்கள் இனிமையான இடியோசையை எழுப்பின.

எல்லாம் இவ்வாறு நல்ல முறையில் அமைந்திருக்க, ஒவ்வொருவரின் இதயத்திலும் வீற்றிருக்கும் பிரபுவாகிய விஷ்ணு இரவின் இருளில் தேவகியின் முன்பு முழுமுதற் கடவுளாகத் தோன்றினார். அப்போது பிரபுவாகிய விஷ்ணு கீழ் திசை வானில் தோன்றும் பூரண சந்திரனைப் போன்று விளங்கினார். கிருஷ்ணர் தேய் பிறையின் எட்டாவது நாளன்று தோன்றியிருக்கும்போது, பூரண சந்திரன் உதித்திருக்க முடியுமாவென்று ஆட்சேபிக்கலாம். இதற்கு விடையாக கிருஷ்ணர் சந்திர வம்சத்தில் வந்தவராகையால், அன்றைய இரவில் சந்திரன் முழுமை பெறாதவனாக இருந்தாலும், மகிழ்ச்சியின் மிகுதியாலும் பிரபுவின் அருளாலும் முழுமையாகத் தோன்றினான் என்று கூறப்படுகிறது.

நான்கு கைகளுடன், கைகளில் சங்கும் கதையும் சக்கரமும் தாமரையும் தாங்கி, ஸ்ரீவத்ஸக் குறியுடன், கௌஸ்துப ஆரத்தை அணிந்து, மஞ்சள் பட்டாடை உடுத்தி, கார்மேகம் போல ஒளி வீசி, வைடூரிய மகுடமும் விலைமதிப்பற்ற கங்கணங்களும் காதணிகளும் பிற ஆபரணங்களும் உடல் முழுவதும் அணிந்து, தலையில் அடர்ந்த முடியுடன் அற்புதமான முறையில் இறைவன் தோன்றினார். தேவகி வசுதேவரின் பிரார்த்தனைகளுக்குப் பிறகு, சிறு குழந்தையின் வடிவை ஏற்றார். (கிருஷ்ணா, புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் புத்தகத்திலிருந்து)



புன்னகையுடன் அற்புதமான நாராயண ரூபத்தில் அவர் தோன்றினார். பின்னர், பெற்றோரின் வேண்டுகோளின்படி இரு கைகளைக் கொண்ட மூல ரூபமான கிருஷ்ணர் அங்குத் தோன்றினார்.

### பிறப்பிற்கான முக்கிய காரணங்கள்

திவ்யமான முறையில் தனது சுய உருவத்துடன் முழுமுதற் கடவுள் இவ்வுலகில் தோன்றுவதற்கான காரணம் என்ன என்று சிலர் கேட்கலாம். இதற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையின் பிரபலமான இரண்டு ஸ்லோகங்களில் (4.7-8) பதிலளிக்கின்றார்:

"எப்போதெல்லாம் எங்கெல்லாம் தர்மம் சீர்குலைந்து அதர்மம் ஆதிக்கம் செலுத்துகின்றதோ, பரத குலத் தோன்றலே, அப்போதெல்லாம் நான் தோன்றுகின்றேன். பக்தர்களைக் காத்து, துஷ்டர்களை அழித்து, தர்மத்தின் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காக, நானே யுகந்தோறும் தோன்றுகிறேன்." (மேலும் விவரங்களுக்கு, "கடவுள் அவதரிப்பது ஏன்?" என்னும் ஸ்ரீல பிரபுபாதரின் உரையினைப் படிக்கவும்)

தான் பிறப்பதற்கான மூன்று முக்கிய காரணங்களை இறைவன் இங்கு முன்வைக்கின்றார்: 1) பக்தர்களைக் காத்தல், 2) துஷ்டர்களை அழித்தல், 3) தர்மத்தை நிலைநாட்டுதல். இருப்பினும், தனது விருந்தாவன லீலைகளைக் காண்பதற்குப் பேரவல் கொண்டிருந்த தூய பக்தர்களின் ஏக்கத்தைத் தீர்ப்பது என்னும் நோக்கம் இம்மூன்றில் மிகவும் முக்கியமானதாகும்.

### ஏனைய காரணங்கள்

யுதிஷ்டிர மாமன்னரைப் போன்ற மிகச்சிறந்த புண்ணிய அரசர்களை மகிழ்வித்தல், தனது மிகச்சிறந்த பக்தரான யதுவின் வம்சத்தில் தோன்றி அந்த யது வம்சத்திற்குப் புகழ் சேர்த்தல், தேவர்களிடம் பொறாமை கொண்டோர்களை அழித்தல், தேவகி வசுதேவரைத் திருப்தி செய்தல், பிரம்மாவின் வேண்டுகோளின்படி பூமியின் பாரத்தைக் குறைத்தல், பக்தித் தொண்டின் வழிமுறைகளைப் புதுப்பித்து கட்டுண்ட ஆத்மாக்கள் முக்தி பெற வழி செய்தல், போன்றவை ஸ்ரீ கிருஷ்ணர் பிறப்பதற்கான இதர காரணங்களாகக் கூறப்படுகின்றன.

எவ்வளவு காரணங்கள் கூறப் பட்டாலும், காரணங்களுக்கு அப்பாற்பட்ட அந்தப் பரம்பொருள் இவ்வுலகில் தோன்றுவதற்கு அவரது சொந்த விருப்பமே காரணமாகும். முற்றிலும் சுதந்திரமான அவரை எந்தவொரு காரணமும் கட்டுப்படுத்த முடியாது.

### ஸ்ரீ கிருஷ்ணரின் பிறப்பை அறிவதன் பலன்

ஸ்ரீ கிருஷ்ணரின் பிறப்பிற்குப் பின் இருக்கும் தத்துவங்களை அறிந்துகொள்வதால் என்ன இலாபம் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கான பதிலை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே வழங்குகிறார்:

*ஜன்ம கர்ம ச மே திவ்யம்*
*ஏவம் யோ வேத்தி தத்த்வத:*
*த்யக்த்வா தேஹம் புனர் ஜன்ம*
*நைதி மாம் ஏதி ஸோ (அ)ர்ஜுன*

"எனது தோற்றமும் செயல்களும் திவ்யமானவை என்பதை எவனொருவன் அறிகின்றானோ, அவன் இந்த உடலைவிட்டபின், மீண்டும் இப்பௌதிக உலகில் பிறவி எடுப்பதில்லை. அர்ஜுனா, அவன் எனது நித்திய உலகை அடைகிறான்." (பகவத் கீதை 4.9)

முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர் ஆன்மீக உலகத்திலிருந்து இறங்கிவருவது குறித்த இவ்வுண்மை யினை அறிந்தவன், பௌதிக பந்தத் திலிருந்து விடுதலை பெற்றவன். அவன் தனது தற்போதைய பௌதிக உடலை நீத்தவுடன், இறைவனின் திருநாட்டிற்கு, கோலோக விருந்தாவனத்திற்குத் திரும்புகிறான். பௌதிக பந்தத்திலிருந்து ஆத்மா விடுதலை பெறுவது எளிதானதல்ல. அருவவாதிகளும் யோகிகளும் பற்பல துன்பத்திற்கும் பிறவிகளுக்கும் பிறகே முக்தியடைகின்றனர். இறைவனின் பிரம்மஜோதியில் கலக்கும் அவர்களது முக்தியும் முழுமையானதல்ல, இப்பௌதிக உலகிற்கு மீண்டும் திரும்பும் அபாயம் அவர்களுக்கு உண்டு. ஆனால் இறைவனின் பிறப்பு, உடல் மற்றும் லீலைகளின் திவ்யமான தன்மையினை அறிந்துள்ள பக்தன், இவ்வுடலை நீத்த பின், வைகுண்ட லோகத்தை அடைவதுடன், இப்பௌதிக உலகிற்குத் திரும்பி வரும் அபாயத்திலிருந்து விடுபடுகின்றான்.

### முடிவு

இதனால் நாம் முடிவு செய்வது என்னவெனில், இறைவன் பிறப்பற்றவர் என்றபோதிலும், அவர் தனது சுய சக்தியின் மூலம் தனது திவ்யமான உருவில் இவ்வுலகில் தோன்றுகிறார்; அவர் சாதாரண மனிதனைப் போலத் தோன்றினாலும், அவரது பிறப்பும் செயல்களும் அவரை சாதாரண மனிதரிலிருந்து நிச்சயமாக வேறுபடுத்திக் காட்டுகின்றன—அவை திவ்யமானவை என்னும் இவ்வுண்மையை நாம் புரிந்துகொண்டால், நமக்கு மீண்டும் ஒரு பிறவி கிடையாது.

**எவ்வளவு காரணங்கள் கூறப்பட்டாலும், காரணங்களுக்கு அப்பாற்பட்ட அந்தப் பரம்பொருள் இவ்வுலகில் தோன்றுவதற்கு அவரது சொந்த விருப்பமே காரணமாகும். முற்றிலும் சுதந்திரமான அவரை எந்தவொரு காரணமும் கட்டுப்படுத்த முடியாது.**

# கிருஷ்ணரின் பிறப்பு குறித்து மக்களுக்கு எழும் இதர கேள்விகளுக்கான பதில்கள்

*** மனிதரைப் போலத் தோன்றியதால், அவரை மனிதராக நினைப்பவர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்?**

கடவுள் மனிதனைப் போலத் தோன்றுகிறார் என்பதால், அவரை மனிதனாகவே நினைத்து ஏளனம் செய்பவர்கள், முட்டாள்கள் என்று பகவத் கீதையில் (9.11) கூறப்படுகின்றனர்:

*அவஜானந்தி மாம் மூடா*
*மானுஷீம் தனும் ஆஷ்ரிதம்*
*பரம் பாவம் அஜானந்தோ*
*மம பூத-மஹேஷ்வரம்*

"மனித உருவில் நான் தோன்றும்போது முட்டாள்கள் என்னை ஏளனம் செய்கின்றனர். எனது பரம இயற்கையை, அதாவது, இருப்பவை அனைத்திற்கும் நானே உன்னத உரிமையாளன் என்பதை அவர்கள் அறியார்கள்."

பகவான் திவ்யமானவர் என்பது பகவத் கீதையில் தெளிவாக உரைக்கப் பட்டுள்ளபோதிலும், கிருஷ்ணரை சாதாரண மனிதனாக நினைப்பவர்கள் நிச்சயம் முட்டாள்களே. அவர்கள் எவ்வளவுதான் அறிவுடையவர்களாகத் தோன்றினாலும், அவர்கள் அறிவுடையோர் அல்ல. அவ்வாறு குழம்பியவர்கள், ராட்சசத்தனமான கருத்துகளாலும் நாத்திகக் கருத்துகளாலும் கவரப்படுகின்றனர். அத்தகு மயங்கிய நிலையில் அவர்களது எல்லா முயற்சிகளும் தோல்வியடைவதாகக் கூறப்படுகின்றது.

*** இறைவன் பிறக்கின்றார், பிறந்தவன் இறைவனாக முடியுமா?**

இறைவன் மனிதரைப் போன்று தோன்றுகிறார் என்னும் காரணத்தினால், மனிதனாகப் பிறந்த சாதாரண மனிதன் இறைவனாக ஆகலாம் என்பதோ, அப்படிப்பட்ட யாராவது ஒருவரை இறைவன் என்று ஏற்றுக்கொள்வதோ முட்டாள்தனம். இறைவன் மனிதரைப் போலத் தோன்றியபோதிலும், அவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களை பிரம்மாண்டமான முறையில் செய்ததன் மூலம் தன்னை வெளிப்படுத்தினார். பிறக்கும்போதே நாராயண ரூபத்தைக் காட்டியது, மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோது பூதனையைக் கொன்றது, கம்சன் உட்பட பல்வேறு சக்தி வாய்ந்த அசுரர்களைக்கொன்றது, காளியனின்மீது நடனமாடியது, கோவர்த்தன மலையை குடையாக தனது இடது கை சுண்டு விரலில் உயர்த்திப் பிடித்தது, காட்டுத் தீயை விழுங்கியது, பிரம்மதேவரையே தனது அற்புத லீலையின் மூலம் மயக்கியது, குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் சூரியனையே மறைக்கச் செய்தது, அர்ஜுனனுக்கு விஸ்வரூப தரிசனம் வழங்கியது உட்பட பற்பல அதியற்புத செயல்களை அவர் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இந்த லீலைகள் குறித்து மேலும் அறிந்துகொள்ள விரும்புவோர், ஸ்ரீல பிரபுபாதர் அருளிய "கிருஷ்ணா, புருஷோத்தமராகிய முழுமுதற் கடவுள்" என்னும் புத்தகத்தைப் படிக்கவும்)

இன்றைய சமுதாயத்தில், குறிப்பாக இந்தியாவில், தன்னையே கிருஷ்ணர் (அல்லது இறைவன்) என்று கூறிக்கொள்ளும் முட்டாள் தனமான நபர்கள் பலர் இருப்பது வருந்தத்தக்கதாகும். உண்மையான ஆன்மீக முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டிருப்போர் அத்தகையோரிடமிருந்து முற்றிலும் விலகியிருத்தல் அவசியம். கடவுளுக்கான தகுதிகள் (யோக்கியதை) இல்லாமல், தங்களையே கடவுளாகக் கூறிக் கொள்பவர்கள், அயோக்கியர்களாவர் என்று இஸ்கான் அமைப்பின் ஸ்தாபக ஆச்சாரியர் ஸ்ரீல பிரபுபாதர் கூறுவதுண்டு. கடவுள் எப்போதும் கடவுளே, ஒரு முப்பது வருடங்கள் சாதாரண மனிதனாக இருந்துவிட்டு அதன்பின் திடீரென்று கடவுளாக மாறுவது என்பதெல்லாம் ஏமாற்றுவேலைகள். அத்தகு போலி கடவுள் தனது கடைசி காலகட்டத்தில் கண் தெரியாமல், காது கேட்காமல், நடக்க முடியாமல் துன்பப்படுவதை நம்மால் காண முடியும். ஆனால் கிருஷ்ணர் ஒருபோதும் தனது இளமைப் பருவத்தைத் தாண்டிச் செல்லவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.



*** கிருஷ்ணருடைய உடலும் சாதாரண மனிதனின் உடலைப் போன்று வளர்ச்சிபெற்றது ஏன்?**

"பகவான் கிருஷ்ணரின் உடல் பௌதிக உடலைப் போன்று அழிவுறுவதில்லை என்றபோதிலும், அவர் குழந்தைப் பருவத்திலிருந்து பால்ய பருவத்திற்கும், பால்ய பருவத்திலிருந்து இளமைப் பருவத்திற்கும் வளர்ந்ததைப் போலத் தோன்றுகின்றது. ஆனால் ஆச்சரியம் என்னவெனில், அவர் இளமையைக் கடந்து செல்வதில்லை. குருக்ஷேத்திரப் போரின்போது, வீட்டில் அவருக்குப் பல பேரக் குழந்தைகள் இருந்தனர்; வேறு விதமாகச் சொன்னால், உலகக் கணக்கின்படி அவர் மிக முதியவராக இருந்திருக்க வேண்டும். ஆனால் இருபது, இருபத்தைந்து வயது இளைஞனாகவே அவர் அப்போதும் தோன்றினார். கிருஷ்ணரை வயதான நபராக நாம் எந்தச் சித்திரத்திலும் ஒருபோதும் கண்டதில்லை; ஏனெனில், அவர், படைப்பின் கடந்த, நிகழ், எதிர் காலங்களின் பழம்பெரும் நபராக இருந்தாலும், நம்மைப் போன்று ஒருபோதும் முதுமையடைவதில்லை. அவரது உடலோ, அறிவோ ஒருபோதும் தளர்ச்சியுறுவதோ, மாற்றமடைவதோ இல்லை. எனவே, பௌதிக உலகில் இருந்தாலும், அவர் பிறப்பற்றவர்... உண்மையில் அவரது தோற்றமும் மறைவும், சூரியன் உதித்து நம் முன் சில மணிநேரம் காட்சியளித்து, பிறகு நம் பார்வையிலிருந்து மறைகின்றதே, அதுபோன்றதே. சூரியன் நமது பார்வையில் இல்லாதபோது அஸ்தமித்துவிட்டதாகவும், பார்வைக்கு வரும்போது உதிப்பதாகவும் நாம் எண்ணுகின்றோம். ஆனால் சூரியன் எப்போதும் தனது நிலையில் ஸ்திரமாக உள்ளது; நமது குறைபாடுள்ள திறனற்ற புலன்களாலேயே வானில் சூரியனின் தோற்றத்தையும் மறைவையும் நாம் கணக்கிடுகிறோம்." (பகவத் கீதை உண்மையுருவில், 4.6, பொருளுரை)

*** கடவுள் உண்மையில் உருவமற்றவர் என்றும் அவர் இவ்வுலகில் தோன்றும்போது உருவத்தை எடுப்பதாகவும் ஒரு சிலர் கூறுகின்றனரே?**

யாம் இக்கட்டுரையில் ஏற்கனவே விளக்கியுள்ளபடி, இறைவன் தனது நித்திய உருவில் ஆன்மீக உலகில் லீலைகள் புரிந்து வருகிறார். அவர் இவ்வுலகில் தோன்றும்போது அந்த மூல ரூபத்துடனே தோன்றுகிறார். கடவுளுக்கு உருவமில்லை (அவ்யக்தம்) என்றும், அவர் இங்கு தோன்றும்போது உருவத்தை ஏற்பதாகவும் (வியக்தி) கூறும் பிரிவினரை பகவத் கீதையில் (7.24) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பின்வருமாறு சாடுகின்றார்:

*அவ்யக்தம் வ்யக்திம் ஆபன்னம்*
*மன்யந்தே மாம் அபுத்தய:*
*பரம் பாவம் அஜானந்தோ*
*மமாவ்யயம் அனுத்தமம்*

"என்னைப் பக்குவமாக அறியாத அறிவற்ற மனிதர்கள், கிருஷ்ணர் எனப்படும் பரம புருஷ பகவானாகிய நான், முன்னர் அருவமாக இருந்ததாகவும் தற்போது உருவத்தை ஏற்றிருப்பதாகவும் எண்ணுகின்றனர். அவர்களது சிற்றறிவினால், அழிவற்றதும் மிகவுயர்ந்ததுமான எனது பரம இயற்கையைப் பற்றி அவர்கள் அறியார்."

உருவமற்ற இறைவன் உருவத்தை ஏற்றுக்கொள்கிறார் என்னும் கருத்து உண்மைக்குப் புறம்பானது என்பதை நாம் இதிலிருந்து தெளிவாக அறிந்துகொள்ளலாம்

*ஸ்ரீ கிரிதாரி தாஸ், பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தமிழ்ப் பிரிவில் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*

# புத்திசாலி மனிதர்கள் செய்வது என்ன?

உள்ளதை உள்ளபடி புரிந்துகொள்ள விரும்பும் புத்தியும் திறமையும் கொண்ட மக்கள், பகவானின் தெய்வீக லீலைகளின் வர்ணனைகளைக் கேட்பதில் ஈடுபடுகின்றனர்; ஏனெனில், அவை பாடுவதற்கும் கேட்பதற்கும் உகந்தவை. அத்தகையோர் பௌதிக உலகின் மிகவுயர்ந்த ஆசிகளான முக்தியைக்கூட விரும்புவதில்லை என்றபோது, அதைவிட குறைந்த நிலையிலுள்ள ஸ்வர்க லோக இன்பத்தைப் பெறுவதற்கான விருப்பத்தைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. (ஸ்ரீமத் பாகவதம் 3.15.48)






**ஜட, ஆன்மீக உலகங்கள் அனைத்திற்கும் மூலம் நானே. எல்லாம் என்னிடமிருந்தே தோன்றுகின்றன. இதனை நன்றாக அறிந்த அறிஞர்கள், எனது பக்தித் தொண்டில் ஈடுபட்டு, இதயப்பூர்வமாக என்னை வழிபடுகின்றனர்.**

**(பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், 10.8)**




**எனக்கு அன்புடன் தொண்டு செய்வதில் இடையறாது ஈடுபட்டுள்ளவர்களுக்கு, என்னிடம் வந்தடைவதற்குத் தேவையான அறிவை நானே வழங்குகிறேன்.**

**(பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், 10.10)**

# வண்ணம் தீட்டி மகிழுங்கள்



**குரங்குகளுக்கு வெண்ணெய் கொடுக்கும் கிருஷ்ணர்**

# ஸ்ரீமதி ராதாராணியின் மகத்துவம்

**ஸ்ரீமதி ராதாராணியின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் இக்கட்டுரையை அனைத்து பக்தர்களும் படித்து அவரது அருளைப் பெறுவோமாக.**

வழங்கியவர்: மதனகோபால தாஸ்

## பக்தர்களில் சிறந்தவள் ஸ்ரீமதி ராதாராணி

பலன்நோக்கிச் செயல்படும் கர்மிகளைக் காட்டிலும் வாழ்வின் உயர் மதிப்பை அறிந்த ஞானிகள் சிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அத்தகு ஞானிகளில் யாரெல்லாம் முக்தி பெற்ற நிலைக்கு உயர்வு பெறுகின்றனரோ, அவர்கள் பக்தித் தொண்டை ஏற்றுக் கொள்கின்றனர். அத்தகு பக்தர்கள் ஞானிகளைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். இருப்பினும், கிருஷ்ணரின் மீதான தூய அன்பினை (பிரேமையை) வளர்த்துக் கொண்டவர்கள் இதர பக்தர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். முன்னேறிய பக்தர்கள் அனைவரைக் காட்டிலும் விருந்தாவனத்தின் கோபியர்கள் உயர்ந்தவர்கள். ஏனெனில், அவர்கள் இடையர் குலச் சிறுவனான கிருஷ்ணரை முற்றிலும் சார்ந்துள்ளனர். அந்த கோபியர்களில், ஸ்ரீமதி ராதாராணியே உயர்ந்தவள். கிருஷ்ணருக்கு அவளை விடப் பிரியமானவள் வேறு எவரும் கிடையாது.



## ராதாராணியின் வசீகரம்

மன்மதனின் அழகு அளவிட முடியாததாகக் கூறப்படுகிறது. அனைவரையும் வசீகரிக்கும் தன்மை மன்மதனுக்கு உண்டு. அவனை வென்றவர்கள் மிகவும் அரிது. இப்படிப்பட்ட கோடி மன்மதர்களை வசீகரிக்கும் தன்மை பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு உண்டு. ஆகையால் தான் பகவான் கிருஷ்ணர், 'மதனமோஹனர்' (மன்மதனையும் மயக்கக் கூடியவர்) என்று அழைக்கப் படுகிறார். ஆனால் அந்த மதனமோஹனரையே வசீகரிப்பவள்தான் ராதாராணி. ஆகவே, ராதாராணி 'மதன மோஹன மோஹினி' என்று அழைக்கப்படுகிறாள்.

## ஸ்ரீமதி ராதாராணியின் கருணை

ஸ்ரீமதி ராதாராணி கருணையே வடிவானவள். உலக உயிர்வாழிகளிடம் மிகவும் கருணையும், பேரன்பும் உடையவள். கிருஷ்ணருக்கு மிகவும்

பிரியமானவளாக இருப்பினும், துளியும் கர்வம் இல்லாதவள். விருந்தாவனத்தில் கோபியர்கள் கிருஷ்ணருடன் லீலை களைப் புரிவதற்கான சந்தர்ப்பத்தை ராதாராணியே ஏற்படுத்திக் கொடுப்பாள். இதர கோபியர்கள், கிருஷ்ணருடன் மாதுர்ய பாவத்தைப் (தெய்வீக காதல் உணர்வுகளைப்) பகிர்ந்து கொள்ளும் போது, தான் கிருஷ்ணருடன் இருக்கும் போது அடையும் மகிழ்ச்சியைவிட பல்லாயிரம் மடங்கு மகிழ்ச்சியடைவாள் ஸ்ரீமதி ராதாராணி. அவ்வளவு கருணை உடையவள் ராதாராணி, நாம் ராதாராணியின் அருளைப் பெற்றோமானால், கிருஷ்ணரின் அருள் தானாகவே கிடைக்கும். இதனால் கிருஷ்ணரை விட்டுவிடலாம் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. கிருஷ்ணரை விட்டுவிட்டால் ராதை தனது கருணையை நமக்கு வழங்க மாட்டாள்.

## ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தில் ராதாராணி

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

என்னும் மஹா மந்திரத்தில் 'ஹரே' என்னும் சொல் 8 முறை வருகிறது. 'ஹரா' என்றால் 'ராதா' என்று பொருள். 'ராதா' என்னும் சொல், விளிச்சொல்லாக வரும்போது 'ராதே' என்று மாறுவதைப் போலவே, 'ஹரா' என்னும் சொல் 'ஹரே' என்று மாறி வருவதாக ஸ்ரீல பிரபுபாதர் விளக்குகிறார்.

நாம் இந்த மஹா மந்திரத்தை பகவத் சிந்தனையுடன் வாயினால் உச்சரித்து காதால் நன்கு கேட்க வேண்டும். 'ஹரே' என்று சொல்லும்போது அச்சொல்லின் அலைகள் பரவ, ஸ்ரீமதி ராதாராணியின் பெயர் உச்சரிக்கப்படுவதை எண்ணி பகவான் கிருஷ்ணர் மகிழ்கிறார். அதே சமயம் 'கிருஷ்ண' என்று சொல்லும்போது, பகவான் கிருஷ்ணரின் பெயர் உச்சரிக்கப்படுவதைக் கேட்டு ராதாராணி மகிழ்ச்சியடைகிறாள். இந்த உணர்வை மனத்தில் நிறுத்தி நாம் ஜெபம் செய்ய வேண்டும். ராதாராணியானவள் நம்மீது கருணை வைத்து கோலோக விருந்தாவனத்திற்கு அழைத்துச் செல்ல முடிவு செய்வாளேயானால், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அதனைக் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்.

## ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு

ஸ்ரீமதி ராதாராணி கிருஷ்ணரின் மீது வைத்துள்ள உயர்ந்த அன்பினை கிருஷ்ணரால்கூட உணர முடியவில்லை. அந்த அன்பினை உணர விரும்பிய அவர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவாக, சுமார் 500 வருடங்களுக்கு முன்பு மேற்கு வங்காளத்திலுள்ள மாயாப்பூரில் தோன்றினார். ஸ்ரீமதி ராதாராணியின் மனோபாவத்தையும் திருமேனி நிறத் தையும் தாங்கி, ஜடவுலகின் கட்டுண்ட ஆத்மாக்களாகிய நம்மையெல்லாம் விடுவிப்பதற்காகபரமகருணாமூர்த்தியாக சைதன்ய மஹாபிரபு தோன்றினார். ஸ்ரீமதி ராதாராணி கருணையே உருவானவள் என்பதால், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவும் கருணையின் பெருங்கடலாக காட்சியளித்தார். பகவானின் எல்லா அவதாரங்களிலும் அவரே மிகவும் கருணை வாய்ந்தவராகக் கருதப்படுகிறார்.

## விருந்தாவனமும், ராதாராணியும்

தப்த காஞ்சன கௌராங்கி
ராதே வ்ருந்தாவனேஸ்வரி
வ்ருஷபானு ஸுதேதேவி
ப்ரணமாமி ஹரி-ப்ரியே

''பொன்னிற மேனியுடையவரும், விருஷபானு மஹாராஜாவின் புதல்வி யுமான ராதாராணியே, விருந்தா



வனத்தின் ஈஸ்வரியே, உம்மை நான் வணங்கு கின்றேன்.'' ராதாராணி, விருந்தாவனத்தின் ஈஸ்வரி என்று அழைக்கப்படுகிறாள். விருந்தாவனத்தில் ராதாராணிக்கு சிறப்பான மதிப்பு உண்டு. நாட்டையே கட்டுப்படுத்தும் பிரதமரின் இல்லத்தை அவரது துணைவி கட்டுப்படுத்துவதுபோல, எல்லா உலகையும் கட்டுப்படுத்தும் கிருஷ்ணரின் இல்லத்தை (விருந்தா வனத்தை) ஸ்ரீமதி ராதாராணி கட்டுப் படுத்துகிறாள். விருந்தாவனத்தில் கிருஷ்ணரைக் காட்டிலும் ராதைக்குதான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. விருந்தாவனத்தின் சுவர்களிலெல்லாம் 'ராதே' என்ற பெயர் எழுதப்பட்டிருக்கும். விருந்தாவனத்தில் ரிக்ஷா ஓட்டுபவர்கள் 'நகருங்கள்' என்று சொல்வதற்கு பதில் 'ராதே, ராதே' என்றுதான் சொல்வார்கள். விருந்தாவனத்திலுள்ள ராதாகுண்டத்திற்கும் தனிமதிப்பு உண்டு. ராதாகுண்டத்தின் மீதுள்ள பெரும் மதிப்பினால், பொதுவாக இஸ்கான் பக்தர்கள் அதில் நீராடுவதில்லை. ராதாகுண்டத்தின் தீர்த்தத்தை தெளித்துக் கொண்டாலே ராதாதேவியின் கருணை நமக்குக் கிடைக்கும்.

## ஸ்ரீமத் பாகவதமும் ஸ்ரீமதி ராதாராணியும்

இவ்வளவு சிறப்புமிக்க ஸ்ரீமதி ராதாராணியின் பெயர் ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்படவில்லையே என்று சிலர் வினவுவது வழக்கம். ஸ்ரீமத் பாகவதம் சுகதேவ கோஸ்வாமியால் மன்னர் பரீக்ஷித்திற்கு உபதேசிக்கப்பட்டதாகும், இது பகவான் கிருஷ்ணரைப் பற்றிய மிகவுயர்ந்த புராணம். கிருஷ்ணரைப் பற்றிப்பேசும்போது அங்கு ராதையும் இடம் பெறுதல் மிகவும் அவசியம். ஆனால், பாகவதத்தில் ஓர் இடத்தில்கூட ராதாராணி பிரத்யேகமாகக் கூறப்படவில்லை. ஒரே ஓர் இடத்தில் மட்டும் அவளது பெயர் மறைமுகமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவெனில், 'ஸ்ரீராதே' என்று ஒருமுறை சுகதேவர் கூறினாலும், அவர் தன்னை மறந்த பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து விடுவார். பின்னர், ஏழு நாட்களுக்குள் ஸ்ரீமத் பாகவதத்தை பரீக்ஷித்து மஹாராஜாவுக்கு உபதேசம் செய்ய முடியாது. ஆகவேதான், சுகதேவர் ஒருமுறைகூட ராதிகா தேவியைப் பற்றி நேரடியாக பேசவில்லை,

## ஸ்ரீல பிரபுபாதரும் ராதாகுண்டமும்

இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதரின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி ராதா குண்டத்தின் கரையில் நிகழ்ந்தது. ஸ்ரீல பிரபுபாதரின் குருவாகிய ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர், ''உனக்குப் பணம் கிடைத்தால் புத்தகங்கள் அச்சடித்து விநியோகம் செய்வாயாக,'' என்று ஸ்ரீல பிரபுபாதரிடம் கூறினார். ராதா குண்டத்தின் கரையில் அமைந்திருந்த கௌடீய மடத்தில் வழங்கப்பட்ட இந்த முக்கிய உபதேசம், இஸ்கான் அமைவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் மிக முக்கிய பங்காற்றி யுள்ளதை எவராலும் மறுக்க முடியாது.

## ராதாஷ்டமி

ஸ்ரீமதி ராதாராணி தோன்றிய நன்னாள், ராதாஷ்டமி என்று அழைக்கப் படுகிறது. ஒவ்வொரு வருடமும் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி முடிந்தபின்னர், அதற்கு அடுத்த அஷ்டமியன்று (இவ்வருடம் செப்டம்பர் 15அன்று) இந்நன்னாள் வருகிறது, இவ்விழாவானது கிருஷ்ண பக்தர்களால் மிகவும் விமரிசை யாகக் கொண்டாடப்படுகிறது.

## நம் கடமை

விருந்தாவனம் மனிதகுலத்திற்கு மிகவும் முக்கியமான இடமாகும். ஒவ்வொருவரும், வாழ்க்கையில் ஒருமுறையாவது விருந்தாவனத்திற்குச் சென்று வர வேண்டும். அதுவே மனிதப் பிறப்பின் பயனாகும். விருந்தாவனத்திற்குச் செல்பவர்கள் விருந்தாவனத்தின் ஈஸ்வரியான ராதிகாதேவியின் அருளைப் பெறுவது உறுதி, ''விருந்தாவனத்தின் ஈஸ்வரியே, ஸ்ரீமதி ராதாராணியே, உங்களை வணங்குகின்றேன்; ஆன்மீக குருவிற்கும், உங்களுக்கும், பகவான் கிருஷ்ணருக்கும் சேவை செய்யும் பாக்கியத்தை எப்பொழுதும் எங்களுக்கு அருள்வீர்களாக,'' என்னும் பிரார்த்தனையுடன் நம் மனோநிலையை அமைத்து, பகவத் சேவையிலும் குருவின் சேவையிலும் நாம் ஈடுபட்டால், ஜடவுலகின் தீராத துயரங்களான பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய துன்பங்களிலிருந்து விடுபட்டு, ஆன்மீக உலகமான கோலோக விருந்தாவனத்திற்கு பகவான் நம்மை அழைத்துச் செல்வார் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை,

மதன கோபால தாஸ் MCA, M.Phil, PhD, அவர்கள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்து வருகிறார். கரூரில் உள்ள தனியார் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

## Back to Godhead (ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்)

எனது தற்போதைய பௌதிக சரீரத்தைத் துறந்தபின், ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தைப் பெறுவதற்கான வழிமுறை எனக்குக் கிடைத்துள்ளது. அதே சமயத்தில் என்னுடன் வாழும் ஆண்களையும் பெண்களையும் உடன் அழைத்துச் செல்லவே இந்த Back to Godhead (ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்) என்னும் பத்திரிக்கையைத் துவங்கியுள்ளேன். என்னுடைய தற்போதைய உடலை விட்ட பின்னர், ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தை அடைவேன் என்று நான் கூறும்போது, என்னை மிகவும் உயர்ந்தவனாகவோ பைத்தியக்காரனாகவோ நினைத்து விடாதீர். எனக்கு எது சாத்தியமோ, அஃது அனைவருக்கும் சாத்தியம்.

1956இல் அப்போதைய இந்திய ஜனாதிபதியான Dr. ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு ஸ்ரீல பிரபுபாதர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த ''பிரபுபாதர் நூற்றந்தாதி''. எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரிக்க உள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

---

## குரு வாழ்த்து

**அன்பும் அறமும் ஒருங்கே அணிவகுக்க**
**என்புதோற் போர்த்தும் இடர்கெட– இன்புறக்**
**காதினுட் கண்ணன்பேர் ஓதிய ஒண்குருவின்**
**பாதங்கட் சேர்வேன் பணிந்து.**

அன்பும் அறமும் ஒருங்கே அணிவகுக்க எம்மிடையே தோன்றி, எலும்பும் தோலும் போர்த்தியுள்ள இந்த உடம்பை எடுக்கும் துன்பத்தை நீக்கி, கண்ணனின் திருநாமத்தை இன்பமுற காதினுள் ஓதிய ஒப்பற்ற ஆன்மீக ஆசானின் பாதங்களில் பணிந்து சரணடைகிறேன்.

## நூற்றந்தாதி

**அறம்நிலை செய்துயர் ஆன்மீகம் காக்கும்**
**திறமுடன் தோன்றிய தீரர்– அறம்தாழ்**
**இருபதாம் நூற்றாண்டில் ஈடிணை யில்லாக்**
**குருநம் அபயச் சரண். (1)**

தருமத்தை நிலைசெய்து, உயர்ந்த ஆன்மீகத்தைக் காக்கும் திறமுடன் தோன்றிய தீரர். தருமம் குறைந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஈடு இணையில்லாத குரு நமது அபயச் சரணாரவிந்த பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள்.

**சரணடைந்த பெற்றோர்கட் சைத்தன்யர் தந்த**
**வரமெனப் பெற்றுவளர்த் தார்கள்– பரமகுரு**
**ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஆறிற்தம்**
**தாயிடத்து உண்ட திரு. (2)**

பகவான் சைதன்யரிடம் சரணடைந்த பெற்றோர்கள், அவர் கொடுத்த வரமெனப் பிள்ளையைப் பெற்று வளர்த்தார்கள். பரமகுரு பிரபுபாதர் கி.பி. ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஆறில் தோன்றித் தாயிடம் பால் உண்ட செல்வர்.

**திருநாடு பாரதத்திற் தெய்வநதி பாயும்**
**பெருநகரம் கோல்கத்தா பேரில்– அருகினிற்**
**தந்தைதே கௌர்மோகன் தாயார் ரசனியுடன்**
**நந்தோத் சவம்கண்டார் நன்று. (3)**

தெய்வத் திருநாடு பாரதத்தில், தெய்வீகமான கங்கை நதி பாய்கின்ற பெரிய நகரம் கோல்கத்தாவிற்கு அருகில் அமைந்த சிற்றூரில், தந்தை கௌர்மோகன் தே, தாயார் இரசனியுடன் நந்தோத்சவம் கொண்டாடினார்.

**நன்றாய் வளருங்கால் நற்பிள்ளை இன்பமுறத்**
**தொன்றுதொட்டுக் கொண்டாடும் தேர்விழா– ஒன்றாக**
**ஊர்ச்சிற்றார் கூடிவர ஒண்தந்தை நன்கெடுத்தார்**
**பார்த்திருந்து தன்னைப் பணித்து. (4)**

பிள்ளை வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது, பிள்ளையின் மகிழ்விற்காக தந்தை கௌர்மோகன் ஜெகந்நாதர் தேர்விழாவை ஏற்பாடு செய்து, ஊர்ச் சிறுவர்கள் எல்லாம் கூடிவர, தன்னை அப்பணியில் ஈடுபடுத்தி நன்கு கொண்டாடினர்.



*சிறு குழந்தையான அபயின் விருப்பத்தின்படி, கௌர் மோகன் ஏற்பாடு செய்த ரதயாத்திரை காட்சி*

பணித்துச் சரிதா அமிர்தம் படித்தார்
வணிகம் முடிந்ததும் வந்து– அணியொடு
சங்கீர்த் தனம்மேவும் சைத்தன்யர் மோகனிடம்
நங்கூர மாய்நின்றார் நாடி. (5)

கௌர்மோகன் தே அவர்கள் வணிகம் முடிந்து வந்த கையுடன் தினமும் சைதன்ய சரிதாம்ருதத்தை மிகுந்த ஈடுபாட்டுடன் படித்தார். ஆகையினால் அணியோடு சங்கீர்த்தனம் செய்யும் சைதன்யர் அவருடைய இதயத்தில் நங்கூரம்போல் நின்றிருந்தார்.

நாடினார் தன்மகனை நன்மைசெய் பாகவதம்
பாடிடும் பக்தனாய்ப் பார்த்திட– ஓடிய
நாட்களிற் பிள்ளையை நல்லகல் லூரியில்
வேட்கையால் வைத்தார் விழைந்து. (6)

கௌர்மோகன் தே அவர்கள் தன் மகனைப் பாகவதம் பாடும் பக்தனாய்ப் பார்த்திட விரும்பினார். அப்படியாக நாட்கள் செல்லுகையில் பிள்ளையை நல்ல கல்லூரியில் படிக்க நுழைவித்தார்.

விழைந்தநற் தாயார் விரும்பினார் பிள்ளை
நுழைந்துபேர் ஆங்கில நாட்டில்– நுழையும்
வழக்குகள் ஆயும் வகையினன் ஆகிப்
பழக்கத்தாற் பெற்றிடப் பேர். (7)

ஆனால் தாயார் இரசனியின் விருப்பமோ வேறு. தன்பிள்ளை ஆங்கில நாட்டிற்குச் சென்று படித்து வழக்கறிஞர் ஆக வேண்டும் என்றும், அதனால் பெரிய பேர் பெற வேண்டும் என்றும் விரும்பினார்.

பேர்பெறும் வண்ணம் பயின்றும் கலைகளில்
ஓர்முதற் பட்டம் ஒறுத்தார்மன்– தேர்வினிற்
பத்திரமாய்த் தேறியும் பாரினிற் காந்தியின்
ஒத்துழை யாமை உணர்ந்து. (8)

நன்கு பயின்று தேர்வினில் தேறியும் அபயச் சரண் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பாராட்டித் தன்னுடைய இளம்கலைப் பட்டத்தை ஆங்கிலேயர்களிடம் இருந்து வாங்க வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டார்.

உணர்ந்தநற் தந்தை உதவும் வகையில்
மணத்தை முடித்தார் முறையாய்– மணம்முன்
மருந்துத் துறையில் மகனை நுழைத்தார்
கருமம் புரியக் கலந்து. (9)

தகுந்த காலத்தில், உணர்ந்த தந்தை தன்பிள்ளைக்குத் திருமணத்தை முடித்து வைத்தார். திருமணத்திற்குமுன், மகனை மருந்து தயாரிக்கும் தன் நண்பரிடம் வேலைக்குச் சேர்த்துவிட்டார்.

கலந்துசெய் வேலை கடந்திடும் காலம்
குலம்தரும் சாதுவைக் கூர்ந்தார்– நலம்தரும்
பக்திசித் தாந்தர் பகர்ந்த தனிமொழிகட்
பக்திவே தாந்தராய்ப் பார்த்து. (10)



அபய் தனது குருவான பக்திசித்தாந்தரை முதன்முதலில் சந்தித்த காட்சி

அப்படியாக மருந்து கலந்து விற்கும் வேலை சென்றுகொண்டிருக்கும் காலத்தில் அபயச் சரண் குலம் தருகின்ற சாதுவான தன் குருவைச் சென்று பார்க்க நேர்ந்தது. அந்தத் தருணத்தில் பக்தி சித்தாந்தர் அவர்கள் அபயருக்குள் ஒரு பக்திவேதாந்தர் இருப்பதை உணர்ந்து கட்டளை பிறப்பித்தார்.

பார்த்த குருவிடம் பக்திசெய் கேண்மையாற்
சார்ந்தார் அபயச் சரணுவந்து– சார்ந்த
குருமொழிந்தார் கோளத்திற் கூர்ந்து பகவத்
தருமத்தை நன்கோதத் தான். (11)

பக்தி சித்தாந்தர் அவர்களின் வார்த்தைகளைக் கேட்ட அபயர், இனி இவரே நமக்குக் குரு என்று சரணடைந்தார். பகவத் தருமத்தை இவ்வுலகில் நுணுக்கமாக நன்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று குரு கட்டளையிட்டார்.

தானறிந்த செய்கருமம் தன்பால் அமைத்திட
ஆனமுதற் கைக்கொண்டு ஆங்கமர்ந்தார்– போனபேர்
ஊர்ப்பேர் அலகாபாத் ஓடும் உடல்வயதோ
ஈர்பத்து ஏழொடும் என்று. (12)

தான் அறிந்த மருந்துத் தொழிலை சுயமாக அமைத்துக் கொள்ள விரும்பிய அபயச் சரண், பெரும் நகரமான அலகாபாத்திற்குக் குடியேறினார். அப்போது அவருக்கு வயது இருபத்தேழு.

அலகாபாத் சென்ற பின்னர்... அடுத்த இதழில்...

தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.



# இன்பத்தைத் தேடி...

வழங்கியவர்: ஜெயகோபிநாத தாஸ்

இவ்வுலகிலுள்ள அனைவரும் இன்பத்தைத் தேடி அலைகின்றனர். இன்பமாக இருப்பதற்காக சிலர் மது அருந்துகின்றனர், சிலர் புகை பிடிக்கின்றனர், சிலர் திரைப்படம் பார்க்கின்றனர், வேறு சிலர் பாடல்களைக் கேட்கின்றனர். ஆனால் எவராலும் நிரந்தர இன்பத்தை அடைய முடிவதில்லை. எந்த ஒரு செயல் (அல்லது பொருள்) நமக்குத் தொடர்ந்து இன்பத்தைத் தரக்கூடியதாக இருக்கின்றதோ அதுவே உண்மையான இன்பம். உதாரணத்திற்கு, நமக்கு மிகவும் இன்பம் தரக்கூடிய குலாப் ஜாமூனை எடுத்துக் கொள்வோம். யாரேனும் நமக்கு குலாப்ஜாமூன் கொடுத்தால், இரண்டு அல்லது மூன்றினை இன்பத்துடன் ஏற்றுக்கொள்வோம்; நான்கு, ஐந்து என்று கொடுத்தால் சற்று சிரமத்துடன் ஏற்றுக்கொள்வோம். ஆனால் பத்து, பதினைந்து குலாப்ஜாமூன் கொடுத்தால், அவ்வளவு வேண்டாம் என்று திட்டவட்டமாக மறுத்துவிடுவோம். ஏனென்றால், நம்முடைய வயிற்றில் பிரச்சனை ஏற்பட்டுவிடும். எனவே, அத்தகைய இன்பம் உண்மையான இன்பம் கிடையாது. உண்மையான நிரந்தரமான இன்பத்தை அடைவதற்கான வழியை நாம் ஆராய்வோம்.

## அரிதான மனிதப் பிறவி

நிரந்தர இன்பத்தை அடைவது மனிதப் பிறவியில் மட்டுமே சாத்தியம் என்பதால், மனித வாழ்வு மிகவும் அரிதானதாகக் கருதப்படுகிறது. ஔவையார் கூறுகிறார்: "அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனினும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது." இந்த மானிடப் பிறவி அரிதானது என்பதை நாம் யாரும் யோசிக்காதது ஏன்? மற்ற மிருகங்கள், பறவைகளைக் காட்டிலும் மனிதர்கள் சிறந்தவர்கள் என்ற எண்ணம் அனைவருக்கும் உண்டு. ஆனால் மனிதர்கள் எவ்வாறு சிறந்தவர்கள்? மனிதப் பிறவியின் சிறப்பு என்ன?

## மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள ஒற்றுமை

முதலில் மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையிலான ஒற்றுமையைப் பார்ப்போம். விலங்குகள் சாப்பிடுகின்றன, நாமும் சாப்பிடுகிறோம்; விலங்குகள் உறங்குகின்றன, நாமும் உறங்குகிறோம்; விலங்குகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன, நாமும் நம்மைப் பாதுகாத்துக் கொள்கிறோம்; மேலும், விலங்குகள் இனப்பெருக்கம் செய்கின்றன, நாமும் இனப்பெருக்கம் செய்கின்றோம். இப்படி விலங்குகள் செய்யக்கூடிய செயல்களையே நாமும் செய்து கொண்டிருந்தால், நமக்கும் விலங்குகளுக்கும் என்ன வித்தியாசம்? மனிதனிடத்தில் ஆறாவது அறிவு இருக்கிறது என்று நாம் சொல்கிறோம். ஆனால் அந்த ஆறாவது அறிவை மிருகங்களின் செயல்களுக்கு மட்டுமே உபயோகப்படுத்தினால், மனிதன் விலங்கினைக் காட்டிலும் உயர்ந்தவனல்ல.

## அலெக்ஸாண்டரும் திருடனும்

ஒருமுறை, மாமன்னன் அலெக்ஸாண்டர் இந்தியாவில் முகாமிட்டிருந்த பொழுது, அந்த முகாமினுள் நுழைந்த ஒரு திருடன் தனது கையில் அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு தப்பிக்க முயன்றபோது மாட்டிக் கொண்டான். பின்னர், மாமன்னன் அலெக்ஸாண்டரின் முன்பு அவன் நிறுத்தப்பட்டான். அப்போது, "எனக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்று அந்த திருடன் அலெக்ஸாண்டரிடம் கேட்க, வியந்து போன அவர், "ஏன் அப்படி கேட்கிறாய்?" என்று வினவினார். அதற்கு அந்த திருடன் கூறினான், "நீங்கள் பட்டப்பகலில் நாட்டிற்குள் புகுந்து அங்குள்ளவை எல்லா வற்றையும் சூறையாடிச் செல்கிறீர்கள். நான் இரவில் வீட்டிற்குள் புகுந்து கையில் அகப்பட்டதைச் சூறையாடிச் செல்கிறேன். எனக்குத் திருடன் என்று பெயர், ஆனால் உங்களுக்கோ மாமன்னன் அலெக்ஸாண்டர் என்று பெயர்."

## இரண்டு கால் விலங்குகள்

ஹிதோபதேஷத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:

ஆஹார-நித்ரா-பய-மைதுனம் ச
ஸாமான்யம் ஏதத் பஷுபிர் நராணாம்
தர்மோ ஹி தேஷாம் அதிகோ விஷேஷோ
தர்மேண ஹீனா: பஷுபி: ஸமானா:





“உண்ணுதல், உறங்குதல், உடலுறவு கொள்ளுதல், பாதுகாத்தல் ஆகியவை மனிதனுக்கும் மிருகத்திற்கும் பொதுவானவை, மனிதனை மிருகத்திட மிருந்து வேறுபடுத்திக் காட்டுவது தர்மமே, அந்த தர்மம் இல்லையெனில், மனிதன் மிருகத்திற்கு சமமானவன்.”

மனிதப் பிறவியின் சிறப்பு என்னவெனில், மனிதர்கள் மட்டுமே தமது அறிவை உபயோகப்படுத்தி தர்மம் சார்ந்த கேள்விகளை எழுப்ப முடியும். நமது வாழ்வின் குறிக்கோள் என்ன? நமது துயரத்திற்கான காரணம் என்ன? போன்ற கேள்விகளை எழுப்பி அதற்குண்டான விடையை மனிதப் பிறவியில் மட்டுமே அறிய முடியும்.

அவ்வாறு செய்யாமல், உண்ணுதல், உறங்குதல், உடலுறவு கொள்ளுதல், பாதுகாத்தல் என்னும் செயல்களில் மட்டுமே நமது வாழ்வை ஈடுபடுத்தினால், நாம் இரண்டு கால் விலங்கு அல்லது நாகரிக விலங்கு என்றே கருதப்பட வேண்டியவர்கள்.

## எது பிரச்சனை?

மனிதர்கள் தங்களது வாழ்வின் பிரச்சனைகளைத் தீர்த்து நிரந்தர இன்பத்தை அடைய வேண்டும் என்றால். அவர்கள் முதலில் வாழ்வில் உண்மையான பிரச்சனைகள் என்ன வென்று அறிந்துகொள்ள வேண்டும், அப்பிரச்சனைகள் உண்மையில் யாருக்கும் தெரிவதில்லை. ஒரு பிரச்சனை உண்மையான பிரச்சனையாக இருக்க வேண்டுமென்றால் அது பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த பிரச்சனையானது,

* எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்,

* யாராலும் விரும்பப்படாததாக இருக்க வேண்டும்,

* யாராலும் தவிர்க்க இயலாததாகவும் இருக்க வேண்டும்.

இம்மூன்று நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் பிரச்சனைகள் உண்மை யான பிரச்சனைகளாகக் கருதப்படும். அதன்படி, பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய நான்கும், எல்லோருக்கும் பொதுவானது, யாரும் விரும்பாதது, மேலும், யாராலும் தவிர்க்க இயலாதது. இவையே வாழ்க்கையின் முக்கியமான பிரச்சனைகள், இவை தவிர, உடலினால் எழும் பிரச்சனைகள் (அத்யாத்மிக க்லேஷ), மற்ற உயிரினங்களால் ஏற்படும் பிரச்சனைகள் (அதிபௌதிக க்லேஷ), இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் (அதிதைவிக க்லேஷ) ஆகிய மூன்று பிரச்சனைகளும் கூட உண்மையான பிரச்சனைகளாகும். இந்த பிரச்சனைகளுக்கான தீர்வை அறிவது மனித வாழ்வில் மட்டுமே சாத்தியம். பிரச்சனைகள் தீர்ந்தால் மட்டுமே நாம் உண்மையான ஆனந்தத்தை அடைய முடியும்.

## புலனின்பம் திருப்தியளிக்காது

உண்மையான ஆனந்தம் (அல்லது வெற்றி) என்பது புலன்களால் கிடைக்கும் இன்பமல்ல. தற்காலத்தில் வாழ்க்கையின் வெற்றியானது நாம் எவ்வளவு பொருள் (பணம்) ஈட்டியிருக்கிறோம் என்பதை வைத்தே நிர்ணயிக்கப்படுகின்றது. பணத்தின் மூலமாக புலனின்பம், புலனின்பத்தின் மூலம் சந்தோஷம் அடையலாம் என்று கருதுகிறார்கள். ஆனால் புலனின்பத்தினால் நமக்கு துன்பம்தான் வரும், இன்பம் வராது. புலன்களைத் திருப்தி செய்வதன் மூலம் இன்பமடையலாம் என்பது வெறும் போலியான வாக்குறுதியே.

## சில உதாரணங்கள்

இதனை நிரூபிக்கும் வண்ணம் சாஸ்திரங்களில் அருமையான உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒரு புலனின்ப பொருளினால் கவரப்பட்ட உயிரினங்கள் தங்கள் வாழ்வையோ உயிரையோ இழப்பதை பின்வரும் உதாரணங்களில் காணலாம்.

* கண்களால் (பார்வையால்) தூண்டப்பட்டு நெருப்பை நோக்கி விரையும் விட்டில் பூச்சி, அந்த நெருப்பில் தனது உயிரை இழந்துவிடுகிறது.

* நாக்கினால் (ருசியினால்) தூண்டப்பட்டு தூண்டிலில் இருக்கும் புழுவை சாப்பிட முயலும் மீன், அத்தூண்டிலில் மாட்டி தனது உயிரை இழந்துவிடுகிறது.

* காதினால் (ஒலியினால்) தூண்டப்பட்டு வேடனின் இசையில் மயங்கும் மான், அவனது அம்பினால் தனது உயிரை இழந்துவிடு கிறது. (மான்களைப் பிடிக்க விரும்பும் வேடர்கள் அற்புதமான இசையினை வாசிப்பார்கள்; நவீன காலத்தில் இசைத்தட்டு அல்லது ஒலிநாடாவை இசைக்கவிடுவர். இந்த இசையில் மயங்கிய மான்கள் அசையாமல் ஸ்தம்பித்து நிற்கும். அப்பொழுது வேடர்கள் மானை வேட்டையாடிவிடுவர்.)

* தோலினால் (தொடு உணர்ச்சியினால்) தூண்டப்பட்டு பெண் யானையைப் பின்தொடரும் பலம் மிக்க ஆண் யானை, குழியில் விழுந்து சாதாரண மனிதர்களிடம் அடிமையாகிறது. (யானை பிடிப்பவர்கள் அதற்கென்று ஒரு பெண் யானையைப் பயிற்சி செய்து

வைத்திருப்பர். பெண் யானையின் மீது மோகம் கொண்ட ஆண் யானை பெண் யானையைப் பார்த்தபடி பின்தொடர்ந்து ஓடும். ஏற்கனவே பயிற்சியளிக்கப்பட்ட பெண் யானை இலைகளால் மூடப் பட்ட குழியைத் தவிர்த்து வளைந்து ஓடும். ஆனால் மோகம் கொண்ட ஆண் யானையோ அதையறியாமல் இலையால் மூடப்பட்ட குழியில் விழுந்து சிக்கிக் கொள்ளும்.)

* மூக்கினால் (நறுமணத்தினால்) கவரப்படும் வண்டுகள், தாமரையின் மணத்தில் மயங்கி, அங்கேயே இருக்க, இரவில் தாமரை இதழ்கள் மூடிக் கொண்ட பின்பு மூச்சுத் திணறி இறந்துவிடுகின்றன.


## மனிதர்களின் புலன்கள்

ஏதேனும் ஒரு புலனினால் மட்டுமே அலைகழிக்கப்பட்டு இந்த உயிரினங்கள் தங்களது வாழ்க்கையை இழக்கின்றன. அப்படியிருக்க மனிதனின் எல்லாப் புலன்களையும் கவர்ந்து இழுக்கும் அளவிற்கு இன்றைய நாகரிக வளர்ச்சி இருக்கின்றது. கண்களைக் கவரும் வண்ணப் படங்கள், தொலைக்காட்சி மற்றும் சினிமா; காதுகளைக் கவரும் இசை, ஒலி மற்றும் பாடல்கள்; சுவாசத்தைக் கவரும் வாசனைப் பொருட்கள்; தொடு உணர்ச்சியைக் கவரும் மிருதுவான பொருள்கள் என்று பல திசைகளில் இழுக்கப்படும் புலன்களினால் மனிதன் தினமும் துன்பப்படுகிறான். புலனின்பம் நெருப்பைப் போன்றது என்றோ அரிப்பைப் போன்றது என்றோ கூறலாம். நெருப்பில் நாம் அதிக எண்ணெய் ஊற்றினால், அது மேலும் அதிகமாக வளர்ந்து விடும். அரிப்பும் அதுபோன்றதே; நாம் அதை சொரிந்து விட்டு போக்கிவிடலாம் என்று நினைத்தால், அரிப்பு இன்னும் அதிகரித்து, அந்த இடமே புண்ணாகி விடும்.

## உண்மையான இன்பம்

அதுபோல, புலன்களுக்குத் திருப்தி யளிப்பதற்காக புலனின்பத்தில் நாம் ஈடுபட்டால், அவை மேன்மேலும் புலனுகர்ச்சியைக் கேட்குமேயொழிய என்றுமே திருப்தியடையாது. திருப்தி யில்லாத மனம் துயரப்படுமே ஒழிய சந்தோஷமடையாது. ஆகையால் இன்பத் தைத் தேடுவோர் கவனிக்க வேண்டியது என்னவெனில், உண்மையான இன்பம் புலனுகர்ச்சியால் கிடைக்காது; மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்தி தன்னுணர்வு பெறும்போதுதான் நம்மால் உண்மையான இன்பத்தை அடைய முடியும். தன்னுணர்வு பெறுவதற்கான வழிமுறைகளை அடுத்துவரும் இதழ்களில் காணலாம். ஓம் தத் சத்.

ஜெய கோபிநாத தாஸ் B.E அவர்கள்,
இஸ்கான் சென்னைக் கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாகத் தொண்டாற்றி வருகிறார்.



சுவையினால் உயிரிழக்கும் மீன்; இசையினால் உயிரிழக்கும் மான்;
தொடு உணர்ச்சியால் அடிமையாகும் யானை; மற்றும் நறுமணத்தினால் உயிரிழக்கும் வண்டு.



தமிழில் உள்ள
ஒரே முழுப் பதிப்பு
அனைத்து இஸ்கான்
கோவில்களிலும் கிடைக்கும்.
மேலும் விவரங்களுக்கு, 91596 39306
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம். வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு, மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்களும் சுவைக்கக்கூடிய அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் 6

*ருஷய ஊசு:*
*த்வயா கலு புராணானி ஸேதிஹாஸானி சானக*
*ஆக்யாதான்-யப்-யதீதானி தர்ம-ஷாஸ்த்ராணி யான்-யுத*

#### மொழிபெயர்ப்பு

**ரிஷிகள் கூறினர்:** மதிப்பிற்குரிய சூத கோஸ்வாமியே, தாங்கள் எல்லாக் களங்கங்களிலிருந்தும் முற்றிலும் விடுபட்டவர். ஆன்மீக வாழ்விற்குத் தேவையான புகழ்பெற்ற எல்லா சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும்கூட தாங்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். முறையான வழிகாட்டலின் கீழ் அவற்றைக் கற்றது மட்டுமின்றி தாங்கள் அவற்றை விளக்கியும் இருக்கிறீர்கள்.

#### பொருளுரை

ஒரு கோஸ்வாமி, அல்லது ஸ்ரீ வியாசதேவரின் உண்மையான பிரதிநிதியொருவர் எல்லாவிதமான களங்கங்களி லிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். கலி யுகத்தின் நான்கு பெரிய களங்கங்களாவன: (1) பெண்களுடனான தகாத உறவு, (2) மிருக வதை, (3) போதைப் பொருள் உட்கொள்ளல், (4) அனைத்து வகையான சூதாட்டம். வியாசாஸனத்தில் தைரியமாக அமர்வதற்கு முன், இவ்வெல்லாக் களங்கங்களிலிருந்தும் கோஸ்வாமி ஒருவர் விடுபட்டிருக்க வேண்டும். தூய குணங்கள் இல்லாதவர்களும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள களங்கங் களிலிருந்து விடுபடாதவர்களும் வியாசாஸனத்தில் அமர அனுமதிக்கப்படக் கூடாது. அவர், இவ்வெல்லாக் களங்கங் களிலிருந்தும் விடுபட்டிருப்பதோடு, வேதங்களையும் பிற சாஸ்திரங்களையும் நன்றாக கற்றுணர்ந்தவராகவும் இருக்க வேண்டும். புராணங்களும் வேதங்களின் அங்கங்களேயாகும். மஹாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களும் வேதங்களின் அங்கங்களே. ஆச்சாரியர் அல்லது கோஸ்வாமி எனப்படுபவர் இவ்வெல்லா சாஸ்திரங்களையும் நன்கு கற்றறிந்திருக்க வேண்டும். அவற்றைப் படிப்பதைவிட, கேட்பதும் விளக்குவதும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. கேட்பதாலும் விளக்குவதாலும் மட்டுமே சாஸ்திரங்களின் அறிவை ஒருவரால் கிரகித்துக் கொள்ள முடியும். கேட்பது, *ஷ்ரவணம்* என்றும், விளக்குவது *கீர்தனம்* என்றும் அழைக்கப்படுகின்றன. *ஷ்ரவணம், கீர்தனம்* என்னும் இவ்விரு முறைகளும் ஆன்மீக வாழ்வில் முன்னேறுவதற்கு மிகவும் முக்கியமானவையாகும். சரியான அதிகாரியிடமிருந்து அடக்கமாகக் கேட்டு, திவ்யமான அறிவை முறையாகப் பெற்றவரால் மட்டுமே இவ்விஷயத்தை முறையாக விளக்க முடியும்.

### ஸ்லோகம் 7

*யானி வேத-விதாம் ஷ்ரேஷ்டோ பகவான் பாதராயண:*
*அன்யே ச முனய: ஸூத பராவர-விதோ விது:*

#### மொழிபெயர்ப்பு

ஓ சூத கோஸ்வாமியே, கற்றறிந்த வேதாந்திகளில் மூத்தவரான தாங்கள், பரம புருஷரின் அவதாரமாகிய வியாசதேவரைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறீர்கள். மேலும், எல்லா வகையான பௌதிக, ஆன்மீக ஞானத்தில் நன்கு கற்றுத் தேர்ந்தவர்களான மற்ற முனிவர்களைப் பற்றியும் தாங்கள் அறிவீர்கள்.

#### பொருளுரை

ஸ்ரீமத் பாகவதம் என்பது, பிரம்ம சூத்திரத்தின், அல்லது பாதராயணி* வேதாந்த சூத்திரத்தின் மீதான இயற்கையான வியாக்கியானமாகும். எல்லா வேத இலக்கியங்களின் சாரமான ஸ்ரீமத் பாகவதம், வேதாந்த சூத்திரம் ஆகிய இரண்டிற்கும் வியாசதேவரே ஆசிரியர் என்பதால், ஸ்ரீமத் பாகவதம் இயல்பான வியாக்கியானம் என்றழைக்கப்படுகிறது. வியாசதேவர் மட்டுமின்றி, கௌதமர், கணாடர், கபிலர், பதஞ்ஜலி, ஜைமினி, அஷ்டவக்ரர் ஆகியோர் இதர ஆறு வேறுபட்ட தத்துவங்களின் ஆசிரியர்களாக உள்ளனர். வேதாந்த சூத்திரத்தில் ஆஸ்திகம் பூரணமாக விளக்கப்பட்டுள்ளது; ஆனால் மற்ற கற்பனைத் தத்துவங்களில், எல்லா காரணங்களுக்கும் இறுதி காரணத்தைப் பற்றிய விவரங்கள் ஏறக்குறைய இல்லை என்று கூறலாம். எல்லா தத்துவ முறைகளிலும் அனுபவம் பெற்றவர் மட்டுமே வியாசாஸனத்தில் அமர முடியும்; ஏனெனில், அப்போதுதான்

* பாதராயணி—வியாஸதேவரின் மற்றொரு பெயர்.

மற்றெல்லா தத்துவ முறைகளுக்கும் எதிராக பாகவதத்தின் பக்திக் கொள்கையை அவரால் பூரணமாக வழங்க முடியும். ஸ்ரீல சூத கோஸ்வாமி அத்தகு தகுதியுள்ள ஆசிரியராக இருந்ததால், நைமிஷாரண்யத்திலிருந்த முனிவர்கள் அவரை வியாசாஸனத்திற்கு உயர்த்தினர். அதிகாரப்பூர்வமான சக்தி-ஆவேஷ அவதாரம் என்பதால், ஸ்ரீல வியாசதேவர் இங்கு 'பகவான்' என்று அழைக்கப்படுகிறார்.

## ஸ்லோகம் 8

வேத்த த்வம் ஸௌம்ய தத் ஸர்வம்
தத்த்வதஸ் தத்-அனுக்ரஹாத்
ப்ரூயு: ஸ்நிக்தஸ்ய ஷிஷ்யஸ்ய
குரவோ குஹ்யம் அப்-யுத

## மொழிபெயர்ப்பு

நீங்கள் பணிவுள்ளவர் என்பதால், உங்களுடைய ஆன்மீக குருமார்கள், ஒரு நற்பண்புள்ள சீடருக்கு அளிக்கப்பட வேண்டிய எல்லாக் கல்விகளையும் உங்களுக்கு அளித்து அனுக்ரஹம் செய்துள்ளனர். எனவே, அவர்களிடமிருந்து தாங்கள் விஞ்ஞானப்பூர்வமாக கற்றறிந்தவை எல்லாவற்றையும் எங்களுக்குக் கூறுவீராக.

## பொருளுரை

ஆன்மீக குருவைத் திருப்திப்படுத்தி அவருடைய உண்மையான ஆசீர்வாதத்தைப் பெறுவதே ஆன்மீக வாழ்வின்



வெற்றியின் இரகசியமாகும். ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர், ஆன்மிக குருவின் மீதான தமது புகழ்பெற்ற எட்டு செய்யுள்களில் பின்வருமாறு பாடியுள்ளார்: "எனது ஆன்மீக குருவின் தாமரைப் பாதங்களில் எனது பணிவான வணக்கங்களை நான் சமர்ப்பிக்கின்றேன். அவரது திருப்தியால் மட்டுமே ஒருவர் பரம புருஷ பகவானைத் திருப்திப்படுத்த முடியும்; அவர் அதிருப்தியடைந்தால், ஆன்மீகத் தன்னுணர்வுப் பாதையில் பெருஞ்சேதம்தான் விளையும்." எனவே, அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குருவிடம் முழுமையாக கீழ்ப்படிந்த, பணிவான குணம், சீடரொருவருக்கு மிகவும் அவசியமாகும். சீடர் என்ற முறையில், ஸ்ரீல சூத கோஸ்வாமி இத்தகுதிகளையெல்லாம் பெற்றிருந்தார். ஆகவே, ஸ்ரீல வியாசதேவர் மற்றும் இதர கற்றறிந்த, தன்னுணர்வு பெற்ற ஆன்மீக குருமார்களின் எல்லா ஆதரவுகளையும் அவர் அடையப் பெற்றவரானார். ஸ்ரீல சூத கோஸ்வாமி அங்கீகாரம் பெற்றவர் என்பதில் நைமிஷாரண்ய முனிவர்கள் நம்பிக்கை கொண்டிருந்ததால், அவரிடமிருந்து கேட்டறிய அவர்கள் ஆவல் கொண்டிருந்தனர்.

## ஸ்லோகம் 9

தத்ர தத்ராஞ்ஜஸாயுஷ்மன் பவதா யத் வினிஷ்சிதம்
பும்ஸாம் ஏகாந்தத: ஷ்ரேயஸ் தன் ந: ஷம்ஸிதும் அர்ஹசி


## மொழிபெயர்ப்பு

நீண்ட ஆயுள் படைத்தவரே, பொதுமக்களின் இறுதி நன்மைக்கு உகந்ததாகவும் பூரணமானதாகவும் தாங்கள் எதனை உணர்ந்துள்ளீரோ, அதனை சுலபமாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தயவுசெய்து எங்களுக்கு விளக்கிக் கூறும்படி வேண்டுகிறோம்.

## பொருளுரை

பகவத் கீதையில் ஆச்சாரியரை வழிபடுதல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆச்சாரியர்களும் கோஸ்வாமிகளும் பொது மக்களின் நல்வாழ்வைப் பற்றிய, குறிப்பாக ஆன்மீக நலனைப் பற்றிய எண்ணத்திலேயே எப்பொழுதும் ஆழ்ந்துள்ளனர். பௌதிக நலன் ஆன்மீக நலனைத் தானாகவே பின்தொடரும். எனவே, ஆச்சாரியர்கள் பொதுமக்களின் ஆன்மீக நலனுக்கான வழிகளைக் காட்டியுள்ளனர். தொல்லைகள் நிறைந்த இரும்பு யுகமாகிய கலி யுகத்தின் தகுதியற்ற நிலையை முன்னரே உணர்ந்த முனிவர்கள், இந்த யுகத்தின் மக்கள் எல்லா விதத்திலும் வெறுக்கப்படுவதால், அனைத்து வேத சாஸ்திரங்களின் சாரத்தைத் தந்தருளுமாறு சூத கோஸ்வாமியிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். மக்களுக்கு முடிவான நன்மை பயக்கக்கூடியதான பரிபூரண நன்மையைப் பற்றி முனிவர்கள் கேள்வி எழுப்பினர். கலி யுக மக்களின் வெறுக்கத்தக்க செயல்களின் நிலைகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. (அடுத்த இதழில் தொடரும்)

# கிருஷ்ணரைக் காணுதல்



**ஸ்ரீல பிரபுபாதர்:** கிருஷ்ணரைப் பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டாம். ஆனால் கிருஷ்ணர் உன்னைப் பார்ப்பதற்கு ஏற்றவாறு நீ நடந்து கொள்ள வேண்டும். சூர தாஸர் கண் பார்வையற்றவர், இருப்பினும் அவரது உண்மையான கீர்த்தனத்தில் மகிழ்ச்சியுற்று கிருஷ்ணரே அவரைக் காண வந்தார். நம்மால் பார்க்க முடிகிறதோ இல்லையோ, கிருஷ்ணர் எங்கும் வீற்றுள்ளார். எனவே, நாம் செய்ய வேண்டியதெல்லாம் நேர்மையுடன் நடந்து கொள்வதுதான். கிருஷ்ணர் பசுக்களை கட்டி அரவணைத்துக் கொள்கிறார். வாயில்லா பிராணி, அதற்கென்ன தெரியும். அஃது அர்ஜுனனைப் போல உயர்ந்ததன்று. இருப்பினும் உண்மையுடன் அவரை நெருங்கி, அவரது திருமேனியை நக்கி தனது அன்பை அது வெளிப்படுத்தியதும், உடனடியாக கிருஷ்ணர், "இங்கே வா" என அழைத்து அதனை அரவணைத்து அமுதளித்தார். எனவே, கிருஷ்ணர் நம்மைக் காண வேண்டும் என்று நாம் விரும்ப வேண்டுமேயன்றி, நாமே நேரடியாக அவரைக் காண வேண்டும் என்று விரும்பக் கூடாது. (ஸ்ரீல பிரபுபாத லீலாம்ருதாவிலிருந்து)

---

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(செப்டம்பர் 1 முதல் அக்டோபர் 10 வரை)**

### செப்டம்பர்

02, வியாழன், ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரத் திருநாள்
(நள்ளிரவு வரை விரதம்)

03, வெள்ளி, நந்தோத்ஸவம்
ஸ்ரீல பிரபுபாதர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

5, ஞாயிறு, அன்னத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:05–10:10

12, ஞாயிறு, ஸ்ரீமதி சீதா தாகூராணி (அத்வைத ஆச்சாரியரின் துணைவியார்) தோன்றிய நாள்

15, புதன், ராதாஷ்டமி, ஸ்ரீமதி ராதாராணி தோன்றிய நாள்
(மதியம் வரை விரதம்)

19, ஞாயிறு, பார்ஸ்வ ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:04–07:32
வாமன துவாதசி (வாமனர் தோன்றிய நாள்)
ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி தோன்றிய நாள்

21, செவ்வாய், ஸ்ரீல பக்திவினோத தாகூர் தோன்றிய நாள்
மதியம் வரை விரதம்

22, புதன், ஸ்ரீல ஹரிதாஸ தாகூர் மறைவு நாள்
இரண்டாவது சாதுர்மாதத்தின் கடைசி நாள்

23, வியாழன், ஸ்ரீல பிரபுபாதர் சந்நியாசம் ஏற்ற நாள்
மூன்றாவது சாதுர்மாத விரதம் ஆரம்பம் (ஒரு மாதத்திற்கு பால் சாப்பிடக் கூடாது)

### அக்டோபர்

4, திங்கள், இந்திர ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:03–10:03

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2626508/9. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 041. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@pamho.net www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: 99442 05875. மின்னஞ்சல்: rukmiha.jps@pamho.net

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.









# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

## 65 ஆண்டு கால பாரம்பரியமிக்க Back to Godhead பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது **உங்கள் இல்லம் தேடி!**

ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், லீலை, போன்றவற்றைப் பற்றிக் கேட்பதே ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும். இந்த வழிமுறையினை அறியாத முட்டாள்கள், நிரந்தரமற்ற பொருள்கள், விஷயங்கள், மற்றும் நபர்களைப் பற்றிக் கேட்பதில் ஆவலாக உள்ளனர். கேட்பதில் இருக்கும் ஆர்வத்தை நல்லபடியாக எவ்வாறு உபயோகிப்பது என்பதை அறியாமல் உள்ளனர்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய ஸ்ரீமத் பாகவத உரையிலிருந்து (2.1.2)

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாதந்தோறும் உங்கள் இல்லம் தேடி வர, சந்தாதாரராக மாறுங்கள்.
ஒரு வருட சந்தா: ரூ.160
இரு வருட சந்தா: ரூ.300
ஐந்து வருட சந்தா: ரூ.700
மேலும் விபரங்களுக்கு, உள்பக்கங்களை பார்க்கவும்.

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!**




தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
613, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

விரைவில் தூத்துக்குடி